

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 254 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 31ஆம் திகதி புதன்கிழமை (14.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 24, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## 03 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நா. தினுஷா

கொழும்பு, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம் நிலவுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது.

அதற்கமைய, கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்கை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும்...

02 பக்கம்



# தாய்வானுக்கு கதவடைப்பு!



## சீனாவை சமாளிக்க தாய்பே முதலீடுகளை தவிர்த்தது இலங்கை

நமது அரசியல் செய்தியாளர்

தாய்வானின் முதலீட்டாளர்கள் சிலர் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள எடுத்த முயற்சிகளை இடைநிறுத்தியுள்ளது இலங்கை அரசு.

தாய்வான் இலங்கையில் முதலீடுகளை செய்ய அனுமதித்தால்...

02 பக்கம்

## 2023 இல் தேர்தல் கிடையாது

### அரசாங்கம் திட்டவட்டம்

நா. தினுஷா

நாடு தற்போதுள்ள நிலைமையில் ஜனாதிபதித் தேர்தல் அல்லது வேறு எந்தத் தேர்தலையும் நடத்த முடியாது. இந்த வருடத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆகவே, கடன் மீள் செலுத்துகை குறித்து வேலைத்திட்டத்தை முன்வைக்காமல் ஓர் அடிகூட நகர முடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (13) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தற்போது நாடு இருக்கும் நிலைமையில் இந்த வருடத்துக்குள் தேர்தலொன்றை நடத்த முடியும் என்று நான் கருதவில்லை...

02 பக்கம்





கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் 189ஆவது வருடாந்த திருவிழா நேற்று (13) இடம்பெற்றதுடன் புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி பெருந்திரளான பக்தர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. (படப்பிடிப்பு:பிரதீப் தம்பரகே)

## 'சிங்களம் மாத்திரம்' என்று போலி தேசியவாத பரப்புரை

### அதனால் வங்குரோத்திலிருந்து மீள முடியாதென்கிறார் சஜித்



உலக தொழிற்சந்தைக்கு ஏற்ப மனித வளங்களை உருவாக்க நாம் முன்வர வேண்டும். 'சிங்களம் மாத்திரம்' என்ற போலியான தேசியவாத பரப்புரைகளை விடுத்து யதார்த்தமாக நோக்காவிட்டால் வங்குரோத்து நிலையிலிருந்து மீள முடியாதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அம்பாறையில் நேற்று (13) தெரிவித்தார்.

02 பக்கம்

## நாம் ஏமாறுவோம் என எண்ணாதீர்

### உண்மைகள் விரைவில் வெளிப்படுமென மெல்கம் ஆண்டகை ஆவேசம்



நா. தினுஷா

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை.

02 பக்கம்

## நான்கு மாதங்களில் 8,200 வீதி விபத்துகள்

### 700 பேர் உயிரிழப்பென அறிவிப்பு

கே. சுபானி

நாட்டில் இவ்வருடத்தின் ஜனவரி 01ஆம் திகதி முதல் ஏப்ரல் 30ஆம் திகதிவரையான 04 மாத காலத்துக்குள் 8 ஆயிரத்து 202 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளதுடன் இவ் விபத்துகளில் 709 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த மனதுங்க

### தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் விலகல் குறித்து அமைச்சர் பந்துல

நா. தினுஷா

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றிய பேராசிரியர் மனதுங்க, இரண்டு வருட காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையிலேயே நியமிக்கப்பட்டிருந்ததாகவும் அதன் பின்னர் ஒரு வருட காலம்...

02 பக்கம்

கமெண்ட் கந்தர்...



பாராளுமன்றத்தை கலைக்கப்போறதா ரணில் சொன்னார் எண்டு வையுங்கோ.. அவருக்கு பெரும்பான்மை எம்.பிக்கள் ஆதரவு கொடுப்பார்கள்.. பென்சன் முக்கியமல்லே..



சப்ரகமுவ மாகாணத்தின் புதிய ஆளுநராக முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (13) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

## கல்வி மேம்பாட்டில் விசேட அவதானம்

### சப்ரகமுவ ஆளுநர் நவீன் உறுதி

சப்ரகமுவ மாகாண மாணவர்களின் கல்வி மேம்பாடு தொடர்பில் விசேட அவதானம் செலுத்தவுள்ளதாக அந்த மாகாணத்தின் புதிய ஆளுநர் நவீன் திசாநாயக்க நேற்று (13) தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சப்ரகமுவ மாகாண ஆளுநராக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

02 பக்கம்



உஷ்

ஜனாதிபதி ரணிலுக்கும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசிலுக்குமிடையில் இரண்டு தினங்களுக்கு முன்னர் கொழும்பில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி தனியே அரசியல் கூட்டணி அமைப்பதால் தனிவழி செல்வது குறித்து பொதுஜன பெரமுன ஆராய்வதாக பெசில் அதன்போது கூறியதாக தகவல் கசிந்துள்ளது.

எப்படியோ பொதுஜன பெரமுனவின் இளவயது எம்.பிக்கள் ரணிலின் பக்கம் உள்ளனராம். பெசில் பேச்சை அவர்கள் கேட்கும் நிலைமை இல்லையாம்.

## மேல் மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு இன்று ஆரம்பம்



கே. சுபானி

மேல் மாகாணத்தில் இன்றுமுதல் மூன்று நாட்களுக்கு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படையினரால் முன்னெடுக்கப்படவுள்ள இவ்வேலைத்திட்டம் இன்றும் (14) ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், தொடர்ந்தும் நாளை (15) மற்றும் நாளைமறுதினம் (16) வரை நடைபெறவுள்ளது.

02 பக்கம்



## ஆறு மாதங்களுக்குள் தேர்தல் இடம்பெறும்

### மரிக்கார் எம்.பி. நம்பிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் வளர்ந்து வரும் முரண்பாடுகளால் ஆறு மாதங்களுக்குள் திடீர் பொதுத் தேர்தலுக்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## தெற்காசியப் பயணிகளுக்கு விரைவில் இலவச விசா

### அந்நிய செலாவணி வருமானத்தை கருத்திற்கொண்டு அரசு நடவடிக்கை



கே. சுபானி

தெற்காசிய நாடுகளுக்கான இலவச விசா வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு விரைவில் தெற்காசிய நாடுகளுக்கான...

02 பக்கம்

## தாய்வானுக்கு...

சீனாவின் கோபத்தை எதிர்கொள்ளவேண்டி வருமென்பதால் இலங்கை இவ்வாறு நடந்துகொண்டுள்ளதாக உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் முதலீடுகளைச் செய்ய தாய்வானின் முதலீட்டாளர்கள் சிலர் இலங்கை முதலீட்டுச் சபையின் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளபோதும் இலங்கை அரசு அவற்றை ஏற்கவில்லை. அநேகமாக சில காரணங்களை சுட்டிக்காட்டி அந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் வாய்ப்புகளே இருக்கின்றன.

இலங்கையில் முதலீடுகளைச் செய்து பலருக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்த தாய்வான் முதலீட்டாளர்கள் விருப்பம்கொண்டுள்ள போதிலும் அவர்களை இலங்கைக்குள் அனுமதிக்காதிருக்க இலங்கை அரசு தீர்மானித்துள்ளமைக்கு சீனாவுடனான இலங்கையின் நெருக்கமே காரணமென அறியமுடிகின்றது.

தாய்வான் சீனாவுக்கு அருகிலிருக்கும் ஒரு தீவு தேசமாகும். தற்போது தனி நாடாக திகழ்ந்தாலும் தாய்வானை தமது நாட்டின் ஒரு பகுதியாகவே சீனா கருதுகிறது.

1949 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் வெற்றியின் பின்னர் சீனாவிலிருந்து சுமார் இரண்டு மில்லியன் பேர் தாய்வானுக்கு தப்பியோடினர்.அன்று முதல் 1971 ஆம் ஆண்டு வரை, தாய்வானை சீனாவாகவே ஐக்கிய நாடுகள் சபை கருதியது. 23 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட தாய்வான், உலகில் 48 ஆவது பெரிய நாடாகும்.

தாய்வான் ஒரு பொருளாதார பலம் கொண்ட நாடு என்பதுடன், மொத்த தேசிய வருமானத்தில் சிறந்த நிலையிலுள்ள 30 நாடுகளில் தாய்வானும் அடங்குகின்றது. பெருந்தெருக்கள், சுரங்க ரயில் பாதை, துறைமுகம் என பொருளாதாரத்துக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது தாய்வான்.

## 03 மாவட்டங்களுக்கு...

அதனை அண்மித்த பகுதிகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நேற்று மாலை வரையான 24 மணிநேரத்தில் 75 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதால், தொடர்ந்து மழைவீழ்ச்சி பதிவாகுமெனில் மணிசரிவு அல்லது தரை உள்ளிறக்கம் இடம்பெறுவதற்கு அதிகவாய்ப்புகள் இருக்கின்றன. இதேவேளை கேகாலை மாவட்டத்தின் யட்டியந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் நேற்று மாலை வரையான 24 மணிநேரத்தில் 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன் தெரணியகலை மற்றும் தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் நேற்று மாலை வரையான 24 மணிநேரத்தில் 150 மல்லி மீற்றருக்கும் அதிகமாக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதன் காரணமாக இந்த பிரதேசங்களிலும் மணிசரிவு இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன.

மேலும், இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியெல்ல, அயகம, குருவிட்ட மற்றும் பெல்மதுல்ல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் அவற்றை அண்மித்த பிரதேசங்களில் நேற்று மலைவரையான 24 மணிநேரத்தில் 75 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன் எல்பாத, நிவித்திகல, கலவானை, எஹலியகொட மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் அவற்றை அண்மித்த பகுதிகளில் 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. தெரணியகலை மற்றும் தெஹியோவிட்ட ஆகிய பிரதேசங்களில் இந்நிலை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

மண்சரிவுக்கு முன்னரான அறிகுறிகளை கொண்ட இடங்களிலிருந்து உடனடியாக மக்கள் அப்பால் நகரவேண்டும் என்றும் பாதிப்பு ஏதுநிலையுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் மேலதிக விழிப்புடன் செயற்பட வேண்டும் என்பதுடன் கடும் மழை தொடருமாயின் விரைவாக பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர தயாராக இருக்குமாறும் அந்த நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## ஆறு மாதங்களுக்குள்...

என் வார்த்தைகளைக் குறித்துக்கொள்ளுங்கள். என் கணிப்பு நிறைவேறும் எனவும் அவர் ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளார். “ஜனாதிபதிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் இருப்பதை நாங்கள் அவதானித்துள்ளோம். நேற்று (நேற்று முன்தினம்) கூட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியுடனான சந்திப்பை புறக்கணித்தபோது இது தெளிவாகியுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் ஊடாக அழைப்பு விடுக்கப்படாததால் தாங்கள் பங்கேற்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர். சில ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் ஜனாதிபதி ஒற்றையாட்சிக்கு முயற்சிப்பதாக குறை கூறுவதையும் காண்கிறோம். இது அரசியல் நாடகங்களோடு முடிவடையும்” எனவும் அவர் தெரிவித்துள்ளார். “எம்.பி.யான நாமல் ராஜபக்ஷவை முன்னணிக்குக் கொண்டுவர ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆர்வம் காட்டலாம். ஏனையவர்களுடன் சேர்ந்து அவரை எதிர்க்கட்சிக்கு குறுக்காக மாற்றி, பின்னர் அவர் எதிர்க்கட்சித் தலைவராக வருவதற்கு வழிவகை செய்வார்கள். ஜனாதிபதி விக்கிரமசிங்க தனிமைப்படுத்தப்படுவார். அவருக்கு பாராளுமன்ற பெரும்பான்மை கிடைக்காது. இது அவரை பொதுத் தேர்தலை நடத்த நிர்ப்பந்திக்கும். ஆறு மாதங்களுக்குள் ஒரு பொதுத் தேர்தல் ஒரு நிகழ்வாக மாறும் ”என்றார்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அணியில்லாமல் தொடர முடியாது என்றும்“ஜனாதிபதி, அமைச்சுச் செயலாளர்களுடன் நீண்ட காலம் செல்ல முடியாது,” எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தெற்காசியப்...

இலவச விசா வழங்கும் நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், சார்க் (தெற்காசிய நாடுகளுக்கான பிராந்திய கூட்டமைப்பு) உறுப்பு நாடுகளுக்கான இலவச விசா வழங்கப்படவுள்ளது. அதனை இறுதி செய்வதற்கான நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

அதேவேளை, நுழைவுத் தடைகளை குறைப்பதன் மூலம் இலங்கையை மிகவும் வரவேற்கக்கூடிய மற்றும் அணுகக்கூடிய ஒரு நாடாக நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இம்முயற்சி வெற்றிகரமான அமுலாகுமானால் எதிர்காலத்தில் அனைத்து நாடுகளுக்கும் இலவச விசா நடைமுறை விரிவுபடுத்தப்படும். இந்நடைமுறைமூலம் பல்லின சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் ஈர்ப்பதற்கும் நாட்டின் தயாரிப்புகள் மற்றும் சந்தையை விரிவுபடுத்துவதற்கும் ஊக்குவிக்கப்படும்.

மேலும், இவ்வருடத்துள் 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் மற்றும் 3 பில்லியனுக்கும் அதிகமான இலாபத்தைப் பெற எதிர்பார்த்துள்ளோம்.

2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாத காலத்துக்குள் 827.8 மில்லியன் சுற்றுலாத்துறை வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. கடந்த ஆண்டு இதே காலப்பகுதிக்கு பெறப்பட்ட வருமானத்தைவிட இது 30.4 சதவீதம் அதிகமாகும்.

அதேவேளை, மே மாதத்துக்கான சுற்றுலாத்துறை வருமானம் 131.5 மில்லியன் என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றார்.

## மேல் மாகாணத்தில்...

இவ்வருடத்தின் ஆரம்பம் முதல் இதுவரையான காலப்பகுதிக்குள் நாடுமுழுவதும் 43ஆயிரத்து 946 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுள் 21ஆயிரத்து 654 பேர் அல்லது 49.9 சதவீதமானோர் மேல்மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். அத்தோடு, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 28 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்களவு குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை, டெங்கு நுளம்புகள் பரவும் விதத்தில் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் நளீன் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், கொழும்பு மாவட்டத்தில் அடுத்த மாத நடுப்பகுதியளவில் வழக்கத்துக்கு மாறாக அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகலாம் என அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கம் எச்சரித்துள்ளது.

## ஒப்பந்த அடிப்படையில் ...

பதவி நீடிக்கப்பட்டிருந்ததாகவும் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நேற்று முன்தினம் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். இந்நிலையிலேயே அவர் இராஜினாமாக் கடிதத்தை ஒப்படைத்துள்ளதாகவும் களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பதவியை ஏற்பதற்காகவே அவர் இராஜினாமாக் கடிதத்தை ஒப்படைத்துள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (13) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன இதுதொடர்பில் மேலும் குறிப்பிடுகையில்,

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி விலகியது தொடர்பில் ஜனாதிபதி எந்த நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தவில்லை. ஆனால், அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அமைச்சரவைக்கு விளக்கமளித்தார்.

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ் பேராசிரியர் என்பதால், அவர் இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையிலேயே சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார். அதன் பின்னர் மேலும் ஒரு வருடத்துக்கு அவரின் பதவி நீடிக்கப்பட்டிருந்தது. மீண்டும் களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியருக்கான கடமைகளை ஏற்கவுள்ளதாக குறிப்பிட்டு அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாகவும் அந்த இராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அமைச்சரவைக்கு மேலும் தெளிவுபடுத்தியிருந்தார் என்று சுட்டிக்காட்டினார்.

## நாம் ஏமாறுவோம்...

எம்மை ஏமாற்றிவிடலாம் என்றே ஆட்சியாளர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு நாங்கள் ஏமாறப்போவதில்லை. ஒருநாள் அவர்களே ஏமாறுவார்கள் என்பதை நினைவிற்கொள்ளவேண்டும். உண்மை வெளிப்படும் வரையே இவர்களின் செயற்பாடுகள் தொடரும். இந்தக் கொடூர தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் அவர்களை காட்டிக்கொடுத்து, அவர்களின் ஊடாக உண்மைகள் வெளிப்படும் காலம் வெகுவிரைவில் வரும். அதுவரையும் நாங்கள் காத்திருப்போம். அந்த தினத்தை தேவாலயங்களில் விழாவாக கொண்டாடுவோம் என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் 189 ஆவது வருடாந்த திருவிழாவில் கலந்துகொண்டு நேற்று முன்தினம் (12) உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஏனையவர்களின் வாழ்க்கையை இழிவுபடுததுவதோ ஏனைய சமயங்களை நிந்திப்பதோ இல்லை. தமக்கு கிடைத்த உரிமையையும் சூழ்நிலையையும் ஏற்றுக்கொண்டு அதற்கு எற்றவாறு வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கையாகும். அதற்கு பணம் அவசியமில்லை.

சமயம் என்பது மற்றவர்கள் மீது சேறு பூசவோ ஏனையவர்களின் சமய நம்பிக்கைகையை நிந்திக்கும் வகையில் செயறபடும் மார்க்கமல்ல. ஒவ்வொரு சமயங்களும் கூறும் விடயங்களை சரியாக புரிந்துகொண்டு, அவற்றில் கூறப்படும் விடயங்களின்படி உண்மையாக வாழ்ந்தாலேயே இறைவனின் ஆசிர்வாதம் கிடைக்கும். அவ்வாறு இல்லாவிட்டால் பொய்பேசுபவர்களாகவும் ஏமாற்றுக்காரர்களாகவும் திருடர்களாகவுமே வாழ வேண்டிய ஏற்படும். இதுவே யதார்த்தமாகும். அவ்வாறானவர்களை இறைவன் ஏற்றுக்கொள்ள மாட்டார். இந்த நாட்டில் யாரும் ஒரு சமயக் கொள்கையைக் கூட பின்பற்றுவதில்லை. அதன் காரணமாகவே எமது நாடு இந்த நிலையில் இருக்கிறது. அவ்வாறு சமயக் கொள்கைகளை முறையாக பின்பற்றுபவர்களாக இருந்தால் நாட்டை இந்தநிலைமைக்குள்ளாக்கியிருக்க மாட்டார்கள்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் தேவாலயங்களில் குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. அந்த தாக்குதல்களினால் 272 பேர் வரையில் உயிரிழந்தார்கள். இந்த மிலேச்சத்தனமான கொலைகளுக்கு யார் தொடர்புடையவர்கள். அதுதொடர்பில் நீதியான விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை. அதன் உண்மை நிலைமையை தேடிக் கண்டுபிடிக்க யாரும் முயற்சிக்கவில்லை.

இந்த சம்பவத்துக்கான சட்ட நீதி இன்னும் கிடைக்கவில்லை. எம்மை ஏமாற்றிவிடலாம் என்றே இவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு நாங்கள் ஏமாறப் போவதில்லை. ஒருநாள் இவர்களே ஏமாறுவார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நண்டு நீரின் மீது நடனமாடுவது, நீர் சூடேரும் வரையே. அதனையும் இவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

தேவாலயங்களிலும் ஹோட்டல்களிலும் கொலை செய்த நபர்கள், அதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள், அதற்கு பலமாக இருந்தவர்கள் சமூகத்தில் இன்று முக்கிய பொறுப்புகளில் இருக்கிறார்கள். பெரியளவான பேச்சுகளை பேசி வருகிறார்கள். தெய்வ அனுக்கிரகத்தில் நீங்கள் செய்த பாவங்கள் உங்களையே தேடி வரும். நீண்ட நாட்களாவதற்கு முன்னர் நீங்களே உங்களை காட்டிக்கொடுத்து, உங்களினூடாகவே உண்மைகள் வெளிப்படும். அதுவரையும் நாங்கள் காத்திருபோம். அந்த தினம் தேவாலயங்களில் நன்றி விழாவை கொண்டாடப்படும். இன்னும் எங்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

சட்டம், நீதி தொடர்பில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கருத்துக்களை முன்வைக்கும் அமைச்சர்களும் தலைவர்களும் இருக்கிறார்கள். புதிய சட்டங்களை கொண்டுவந்து பொதுமக்களை சிறையில் அடைத்து தவறுகளை மூடி மறைத்துவிட்டு வாழவே முயற்சிக்கிறார்கள். அதற்கு இடமளிக்க முடியாது. இறைவனின் சக்தி அதனைவிட பலமானது. மிக விரைவில், இந்த படுகொலையின் உண்மையை வெளிப்படும் என்று நம்புவோம் என்றார்.

## 2023 இல்...

உதாரணமாக வீதி அபிவிருத்தி அமைச்சை எடுத்துக்கொண்டால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட அநேகமான வீதிகள் மழை நீரினால் சேதமடைந்து வருகிறது. அதனால் மக்களே சிக்கலை சந்தித்து வருகிறார்கள்.

நாடு பூராகவும் இவ்வாறு சேதமடைந்துள்ள வீதிகளை புனரமைக்க அண்ணளவாக 53 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வீதிகள் வெளிநாட்டு கடன் வசதிகள், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவி என்பவற்றினாலேயே மறுசீரமைப்புச் செய்யப்படுகின்றன. இந்த வீதிகளின் நிலைமையை சம்பந்தப்பட்ட வங்கிக் தரப்பினருக்கு காண்பித்துள்ளோம். ஆனால், இதுவரையில் ஒரு சதம் கூட கிடைக்கவில்லை.

பொறுமையாக இருக்குமாறும் மறுசீரமைப்புப்பணிகள் நிறைவடைந்து கடன் மீள் செலுத்துகையை அறிவித்ததும் யோசனைகளுக்கான நிதியுதவியை தருவதாகவே அந்த வங்கிகள் குறிப்பிடுகின்றன. அவ்வாறு இருக்கையில், இந்த 53 மில்லியன் அமெரிக்க டொலரை தேடுவதற்கு யாராவது வழி சொல்வார்களாக இருந்தால் வீதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளை செய்துகொடுக்கக் கூடியதாக இருக்கும்.

அரசியல்வாதிகள் கூறும் விடயங்களிலும் ஆட்சியாளர்களின் நிர்வாகத்துக்கும் பாரதூரமான வேறுபாடு இருக்கிறது என்பதை மக்கள் புரிந்திருக்க முடியும். இவ்வளவு காலமும் கடன்கள் மூலமே அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்தப்படாமையின் காரணமாக மீண்டும் கடனைப் பெற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு இருக்கையில் எவ்வாறு தேர்தலை நடத்துவது என்பது புரியவில்லை.

வரலாற்று ரீதியாக நாட்டின் அபிவிருத்திப் பணிகளை வெளிநாட்டு மக்களிடமிருந்து நிதியை கடனுக்கு வாங்கியே இதனை செய்துள்ளோம். அந்த நிதியை மீளச் செலுத்துவது தொடர்பில் கலந்துரையாடவேண்டியுள்ளது. ஜனாதிபதி, அடுத்தவாரம் பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார். இதுதொடர்பில் அங்குள்ள தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கிலேயே அங்கு செல்கிறார். அவ்வாறு இருக்கையில் தேர்தலை எவ்வாறு நடத்துவது? பெற்றுக்கொண்ட கடன் தொகையை மீளச் செலுத்தவிட்டால் அதன் பின்விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும். இதற்கு ஒரு வேலைத்திட்டத்தை அமைத்துக்கொள்ளாமல் ஒரு அடிகூட நகர முடியாது. செப்டெம்பர் மாதத்தின் பின்னரே அடுத்த கட்டங்கள் குறித்து தீர்மானிக்க முடியும் என்றார்.

## கல்வி மேம்பாட்டில்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்காக முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்துவதற்கான உதவிகளை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

நாடு கடந்த காலங்களில் கடுமையான நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருந்த போதிலும் ஜனாதிபதியால் நடைமுறைப்படுத்தப்பட்ட சரியான திட்டங்களின் பலனாக சாதகமான மாற்றங்களைக் காண முடிவதாக சுட்டிக்காட்டிய அவர், சப்ரகமுவ மாகாணத்தின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் உறுதியளித்தார்.

குறிப்பாக சப்ரகமுவ மாகாண மாணவர்களின் கல்வி மேம்பாடு தொடர்பில் விசேட அவதானம் செலுத்தும் அதேநேரம் அரசியல் கட்சித் தலைவர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## 'சிங்களம் மாத்திரம்'...

அம்பாறை, பண்டாரநாயக்க மகளிர் கல்லூரிக்கு 50 இலட்சம் ரூபா பெறுமதியான நவீன பேருந்தொன்றை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றபோதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

வங்குரோத்தடைந்த நாட்டிலிருந்து நாம் மீள வேண்டும். மீண்டுமொரு வங்குரோத்து நிலைக்குச் செல்லாமல் இருக்க எமது நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் உரிய பொதுப் புள்ளிதான் அறிவு. இந்த அறிவை அடிப்படையாகக் கொண்டு செயல்பாடுகளை ஒழுங்கமைத்தால் வெற்றிகரமான இலக்குகளை எட்டலாம்.

வங்குரோத்தடையும் நிலைக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்படாது எனவும்,நாடு மீண்டும் வங்குரோத்து நிலையை அடையும் யுகம் உருவாகாமல் தடுப்பதே இந்தத் திட்டங்களின் நோக்கமாகும்.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பிறந்த தினம் எதிர்வரும் ஜூன் மாதம் 23 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இந்நிலையில் நாடு பூராகவும் கல்வி,சுகாதாரம் அபிவிருத்தி போன்ற பல்வேறு திட்டங்களை பிரபஞ்சம் மற்றும் மூச்சு வேலைத்திட்டத்தின் ஊடக நடைமுறைப்படுத்தி வருகிறோம். அதன் ஒரு கட்டமாகவே அம்பாறை பண்டாரநாயக்க மகளிர் கல்லூரிக்கு 50 இலட்சம் ரூபா பெறுமதியான நவீன பேருந்தொன்று வழக்கப்படுகிறது.

நாடு அறிவின் மையமாக மாறும் என பல்வேறு தரப்பினர் கூறினாலும் ஆட்சிக்கு வந்த பின்னர் அதனை பலரும் மறந்து விட்டார்கள். ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியிலிருந்தும் எமது நாட்டை அறிவு மைய நாடாக மாற்றுவதற்கான அடிப்படை அடித்தளத்தை அமைத்து வருகிறது.

அரச அதிகாரத்துடனேயே இதுவரை மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு சேவையாற்றியுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியானது வரலாற்றை மாற்றியமைத்து எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே மக்கள் பயன் தரும் சேவைகளை ஆற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலவசக் கல்வின் முன்னோடியான சீ.டப்ளிவ். டப்ளிவ் .கண்ணங்கராவின் எண்ணக்கருவை நவீன போக்குக்கு ஏற்ப பலப்படுத்துவதன் ஓர் அங்கமே இந்த பேருந்து வழங்கும் செயற்றிட்டமாகும். இதன் பிரகாரமே 71 ஆவது பேருந்து இவ்வாறு அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. 1970 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க அன்னாரது 11 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவாக தீயணைப்புப் படை கட்டடத்தில் 4 ஆசிரியர்களுடன் ஆரம்பமான இந்த பாடசாலை 6 ஏக்கர் பரப்பில் இன்று அமைந்துள்ளது.

இப்பாடசாலைக்கு இந்நன்கொடையை வழங்க முடிந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

நாட்டின் அபிவிருத்திக்கு கல்வி மட்டுமின்றி சுகாதாரமும் ஒரு காரணம் என்பதால் எதிர்க்கட்சி இதில் தீவிர கவனம் செலுத்தியுள்ளது.மூச்சுத் திட்டத்தின் கீழ் 171.9 மில்லியன் ரூபா பெறுமதியான வைத்தியசாலை உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

திருட்டு,இலஞ்சம்,ஊழல் ஒழிக்கப்படுவது மட்டுமின்றி,கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை நாட்டுக்கு கொண்டு வந்து, சுகாதாரம், கல்வி,விவசாயம் உள்ளிட்ட துறைகளுக்கு குறித்த நிதியை பயன்படுத்தி அத்துறைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் .அனைத்து திருடர் களும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்.

அறிவை அடிப்படையாகக் கொள்ளாத, உண்மைக்குப் புறம்பாக மக்களை ஏமாற்றும் ஆட்சித் தீர்மானங்களாலேயே முன்னைய அரசாங்கம் எமது நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றது.மீண்டும் இவ்வாறான அடிப்படைகளில் நின்று மக்களை ஏமாற்றும் காலத்தை தோற்கடிக்க வேண்டுமானால் அறிவை முன்னிலையாகக் கொண்ட சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

நாட்டில் அனைவருக்கும் கல்வி அணுகலுக்கான சமமான வாய்ப்புகள் நிலவுகிறதா என்ற கேள்வி நிலவுகின்றது.இவ்வாறு பேருந்துகள் வழங்கும் போது சிலதரப்பினர் பல்வேறு விதமாக விமர்சித்து வருகின்றனர்.

உலக தொழில் சந்தைக்கு ஏற்ப மனித வளங்களை எம்மால் வழங்க முடியுமான நிலைக்கு எமது நாடு முன்னகர வேண்டும் .சிங்களம் மாத்திரம் போன்ற போலியான தேசியவாத பரப்புரைகளை விடுத்து யதார்த்தமாக இது குறித்து நோக்காவிட்டால் எம்மால் ஒரு நாடாக தலை தூக்க முடியாது.

சகல பாடசாலைகளிலும் ஆங்கில மொழி ஆய்வுகூடங்களை நிறுவ வேண்டும்.வெளிநாட்டு மொழிகளை கற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் .சீன மற்றும் ஹிந்தி மொழிகளை கற்க வேண்டும் .இவற்றை தாம் கூறும் போது சஜித் பிரேமதாச ஓர் தேசத் துரோகி என அழைப்பார்கள்.இவ்வாறு முறையாக மொழிகளை கற்பதன் மூலம் சீன இந்திய தொழில் சந்தையை எம்மால் வெற்றி கொள்ள முடியும்.

“சிங்களம் மாத்திரம்,சிங்களம் மாத்திரம்” எனக் கூறி இந்த வங்குரோத்து நிலையில் இருந்து மீள முடியாது .நாம் புதிதாக சிந்திக்க வேண்டும் நாம் இன்னும் குறுகிய மனப்பாங்கில் சிந்திக்க முடியாது.சர்வதேசத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் நாம் ஈடுபட வேண்டும்.

இலங்கை உற்பத்திகளை உலகில் விசாலமான தொழில் சந்தைகளான சீன, இந்திய தொழில் சந்தைகளில் எவ்வாறு விற்பனை செய்வது,எவ்வாறு ஏற்றுமதி செய்வதென்பது குறித்து புதிதாக சிந்திக்க வேண்டும்.ஐரோப்பிய ஒன்றியம்,ஐக்கிய அமெரிக்க,சீனா,ஜப்பான்,இந்தியா மாத்திரமல்லாது எம்மால் இன்னும் அணுக முடியாதுள்ள தொழில் சந்தைகளான ஆபிரிக்கா,இலத்தீன் அமெரிக்கா,தென் அமெரிக்கா போன்ற சந்தைகளுக்கும் இலங்கை உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நிலையை எட்ட வேண்டும் . நாடாக நமக்கு தூரநோக்கு ரீதியிலான நீண்டதொரு பயணமுள்ளது. அம்பாறை பண்டாரநாயக்க மகளிர் கல்லூரியில் நிலவும் ஆசியர் பற்றாக்குறையை அடுத்த வரும் பாராளுமன்ற அமர்வில் கல்வி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்து நிலையான தீர்வுகளை பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

## நான்கு மாதங்களில்...

மேலும் இக்காலப்பகுதிக்குள் 667 வீதி விபத்துகளால் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. கவனக்குறைவாக மோட்டார் சைக்கிள் ஓட்டிச்சென்ற 220 பேர், பயணிகள் 102 பேர் மற்றும் பாதசாரிகள் 179 பேர் உள்ளிட்டோர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவிக்கையில்,மேற்குறித்த காலப்பகுதிக்குள் 2ஆயிரத்து 799 மோட்டார் சைக்கிள் விபத்துகளும் ஆயிரத்து 399 முச்சக்கர வண்டி விபத்துகளும் இடம்பெற்றுள்ளன.மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி களே அதிக விபத்துகளுக்கு காரணமாகும். மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன சாரதிகள் விபத்துகளை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். இதற்காக அனைவரும் வீதி ஒழுங்கு விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். அத்தோடு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வாகன ஓட்டுநர் உரிமம் இல்லாது மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களை செலுத்த வேண்டாம். இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 30 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் 2 ஆயிரத்து 174 பாரிய இழப்புகளை ஏற்படுத்திய விபத்துகளும் 2 ஆயிரத்து 160 பாரிய விபத்துகளும் 3ஆயிரத்து 201 சிறு விபத்துளும் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# மக்கள் நலத்திட்டங்கள் அரசியலுக்காக இழுத்தடிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது

## கௌதாரிமுனை காற்றாலை திட்டம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கௌதாரிமுனை காற்றாலை திட்டத்தின் ஊடாக மக்களுக்கும் நாட்டுக்கும் எவ்வாறான நன்மைகளை கூடியளவு விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதிலேயே ஆர்வமாக இருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறுகிய சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக முன்னெடுக்கப்படும் கால இழுத்தடிப்புகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

கௌதாரிமுனை காற்றாலை திட்டத்துக்கு அனுமதி வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று(13) இடம்பெற்றது. இவ்விடயம் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், கௌதாரிமுனை காற்றாலை திட்டத்தின் ஊடாக மக்களுக்கும் நாட்டுக்கும் எவ்வாறான நன்மைகளை கூடியளவு விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதிலேயே ஆர்வமாக உள்ளேன். குறுகிய சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக முன்னெடுக்கப்படும் கால இழுத்தடிப்புகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த காலங்களிலும் இன்றைய (நேற்று) சந்திப்பிலும் மக்கள் பிரதிநிதிகளினாலும் அதிகாரிகளினாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் - ஆலோசனைகள் மற்றும் வாதப் பிரதிவாதங்கள் என்பவற்றின் அடிப்படையில் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளை தெளிவான முறையில் அடையாளப்படுத்தி, அவை நடைமுறைப்படுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இந்தியாவைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்றின் முதலீட்டில் பூநகரி, கௌதாரிமுனையில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ள காற்றாலைத் திட்டத்தின் காரணமாக கௌதாரிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கவுள்ளதுடன் அடிப்படை, சமூக மற்றும் வாழ்வாதார நன்மைகளையும் ஏற்படுத்துவதற்கு இந்திய முதலீட்டாளர்களினால் உத்தரவாதமும் அளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கௌதாரிமுனை கிராமத்துக்கான சுமார் 17 கிலோமீற்றர் வீதி காபட் வீதியாக அமைக்கப்படவுள்ளதுடன், சுமார் 40 கிலோமீற்றர் நீளமான உள்ளக வீதிகளும் உருவாக்கப்படவுள்ளன.

அதேபோன்று, கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களையும் மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்களினால் உத்தவரவாதம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

# “நிதிச் சேவை வெளிவிவகாரக் கொள்கைகள் தொடர்பான முன்னோக்கிய பார்வை”

## நூலின் ஒன்பதாவது தொகுப்பு சபாநாயகருக்கு கையளிப்பு



இலங்கை தூதுவர்கள் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் ‘நிதிச் சேவை வெளிவிவகாரக் கொள்கைகள் தொடர்பான முன்னோக்கிய பார்வை’ எனும் நூலின் ஒன்பதாவது தொகுப்பு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் நேற்றுமுன்தினம் (12) சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி சட்டத்தரணி சரத் விஜேசிங்கவினால் தொகுக்கப்படும் ‘நிதிச் சேவை வெளிவிவகாரக் கொள்கைகள் தொடர்பான முன்னோக்கிய பார்வை’ நூல் துறைசார் நிபுணர்கள் 26 பேரின் எழுத்துப் பங்களிப்பைக் கொண்டுள்ளது.



இந்நிகழ்வில் நாலந்தாராமாதிபதி வணக்கத்துக்குரிய தீனியாவல பாலித தேரர், ஜனாதிபதி சட்டத்தரணி சரத் விஜேசிங்க, பேராசிரியர் பிரதிபா மஹானாமஹேவா, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர், விரிவுரையாளர் சாலிய பீரிஸ், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன, துமிலன் சிவராஜ், சிரேஷ்ட ஊடகவியலாளர் சங்க அமரஜித் உள்ளிட்ட விசேட விருந்தினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# மர்மமான முறையில் உயிரிழந்திருந்த வைத்தியர்

## தம்புத்தேகம பகுதியில் சம்பவம்

தம்புத்தேகம அரச வைத்தியசாலையில் பணியாற்றிய 35 வயதுடைய திருமணமான வைத்தியர் ஒருவர் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக தம்புத்தேகம தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்புத்தேகம வைத்தியசாலையின் சிறுநீரக சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றிய நாரம்மல, கொட்டப்பிட்டியைச் சேர்ந்த அமில சதகெலும் திசாநாயக்க (வயது 35) என்ற வைத்தியரே உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலைக்கு மூன்று நாட்களாக குறித்த வைத்தியர் சமுகமளிக்காததால் வைத்தியசாலை ஊழியர் ஒருவர் வைத்தியரின் வீட்டுக்குச் சென்று பார்த்துள்ளார். அதன்போது அவர் தனது அறையில் இறந்து கிடப்பதை அவதானித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த வைத்தியரின் மனைவி குருநாகல் போதனா வைத்தியசாலையில் பல் வைத்தியராக



கடமையாற்றி வருவதுடன் அவர் தனது ஐந்து வயது மகளுடன் அப் பிரதேசத்திலேயே வசித்து வருகின்றார்.

உயிரிழந்த வைத்தியர் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் தனியாக வசித்து வந்ததாகத் தெரிவிக்கும் பொலிஸார், அவர் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கின்றனர்.

அவரது சடலத்தில் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சப்ரகமுவ ஆளுநராக நவீன் திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது

## சுப்பையா ஆனந்தகுமார் வாழ்த்து



ஜனாதிபதியின் அனைத்து தீர்மானங்களுக்கும் கடந்த காலங்களில் பக்கபலமாகவிருந்து செயல்பட்டவர் நவீன் திசாநாயக்க. இந்நிலையில், சப்ரகமுவ மாகாண ஆளுநராக ஜனாதிபதியினால் அவர் நியமிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறதென ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நவீன் திசாநாயக்க ஐ.தே.கவின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவராவார். அவர் அமைச்சர் உட்பட பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். இதேவேளை ஜனாதிபதியின் அனைத்து தீர்மானங்களுக்கும் கடந்த காலங்களில் பக்கபலமாக நின்றுசெயற்பட்டவர்.

இந்நிலையில் சப்ரகமுவ மாகாண ஆளுநராக அவர் நியமிக்கப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. அவருடன் இணைந்து இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு பல்வேறு உதவித்திட்டங்களை செய்யவும் எதிர்பார்த்துள்ளேன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீர் வளப் பாதுகாப்பு: காலி மாவட்டத்தில் செயலமர்வுகள்

(பேருவளை நிருபர்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை நாடளாவிய ரீதியில் நீர் வளம் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகளை நடத்தி வருகிறது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ், காலி மாவட்ட அரசாங்க ஊழியர்களுக்கான செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இதற்கிணங்க, நாளை வியாழக்கிழமை (15) காலி மாவட்டத்துக்குட்பட்ட கடவத் சதர பிரதேச செயலகத்தில் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், ஜூன் 22ஆம் திகதி ஹிக்கடுவ பிரதேச செயலகத்திலும் ஜூலை 6ஆம் திகதி வெலிவிட்டிய திவிதுர பிரதேச செயலகத்திலும் 12ஆம் திகதி பெந்தோட்டை பிரதேச செயலகத்திலும் 27ஆம் திகதி அக்மீமன பிரதேச செயலகத்திலும் மேற்படி செயலமர்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்செயலமர்வுகள் குறித்த பிரதேச செயலாளர்களின் தலைமையில் நடைபெறும். இதன்போது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மக்கள் தொடர்பு அதிகாரி ஹேமந்த அபயக்கோன், சபையின் காலி அலுவலக சிரேஷ்ட இரசாயனவியலாளர் யூ. சுபாஷினி சொய்சா உட்பட அதிகாரிகள் பலர் பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்தவுள்ளனர்.



யாழ்ப்பாணம், காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு கனடா காரை கலாசார மன்றத்தின் ஊடாக ஒரு தொகுதி மருந்துப்பொருட்கள் நேற்று செவ்வாய்க்கிழமை அன்பளிப்பாக வழங்கப்பட்டன. ‘ஒருத்தி’ திரைப்பட தயாரிப்பாளரால், ஒருத்தி திரைப்படத்தை இலவசமாக திரையிட வழங்கியதன் மூலம் பெறப்பட்ட நிதியில் கனடா காரை கலாசார மன்றம் மருந்துப் பொருட்களை இலவசமாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 31ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** மன உளைச்சல் இருக்கும். செலவுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளுங்கள்.

**ரிஷபம்:** வீண் மனக்கவலைகள் வேண்டாம். எல்லாம் நல்லதற்கே என்று நினைத்து அமைதி கொள்ளுங்கள்.

**மிதுனம்:** உடல் மனம் அமைதியாக இருக்கும். நினைத்ததை இன்று சாதிப்பீர்கள். தன வரவு உண்டு.

**கடகம்:** பயணங்கள் அதிகரிக்கும். உடல் நோய்களைப் பார்த்துக் கொள்ளுங்கள். தொழிலில் சமாளிப்பீர்கள்.

**சிம்மம்:** சுபச் செய்திகளால் மன மகிழ்ச்சி அடைவீர்கள். கடவுள் வழிபாட்டில் மனதை செலுத்துவீர்கள்.

**கன்னி:** மௌனம் காப்பது அவசியம். நீங்களே உங்கள் மனதை கெடுத்துக் கொள்வீர்கள்.

**துலாம்:** காதல் சுற்றுலா செல்வீர்கள். ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பெண்கள் உதவுவார்கள்.

**விருச்சிகம்:** வீண் டென்ஷன் வேண்டாம். தேவையற்ற கோபங்களால் மனக் குழப்பம் உண்டு.

**தனுசு:** தெளிந்த மனதுடன் இன்று அனைத்தையும் சாதிப்பீர்கள். குழந்தைகளால் நன்மையும் புகழும் உண்டு.

**மகரம்:** நீங்கள் நினைத்த பயணத்தால் மகிழ்ச்சியும் இலாபமும் அடைவீர்கள். தாய்வழி உதவிகள் உண்டு.

**கும்பம்:** சதோதர வகையில் நன்மை உண்டு. தைரியத்துடன் சவால்களை வெற்றி கொள்வீர்கள்.

**மீனம்:** ஞாபக மறதியால் அவதிபடுவீர்கள். மனதில் எண்ணற்ற சிந்தனைகள் அலைபாய்ந்த வண்ணமிருக்கும்.

| | |
|---|---|
| திதி | :ஏகாதசி மு.ப.8.48 வரை பின் துவாதசி(தேய்) |
| நட்சத்திரம் | :அஸ்வினி பி.ப.1.40 வரை பின் பரணி |
| யோகம் | :மரண யோகம் முழுவதும் |
| வார சூலை | :வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது |
| நல்லநேரம் | :மு.ப. 8.51– 9.51 மணிவரை |
| ராகுகாலம் | :11.51– 1.21 மணிவரை |
| எமகண்டம் | :7.21 – 8.51 மணிவரை |
| குளிகை | :10.21 – 11.51 மணிவரை |
| சந்திராஷ்டமம் | :கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தனஅதிஷ்டம் | :ஆயிலியம், கேட்டை, ரேவதி(பிறந்தவர்களுக்கு) |
| விசேட தினம் | :ஏகாதசி விரதம் |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜூன் 14ஆம் திகதி, புதன்கிழமை

# ஜனாதிபதியின் வரலாறு பாடம்!

''வரலாற்று முக்கியத்துவம் மிக்க விகாரைகள் உள்ளிட்டவற்றை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக பொது மக்களின் காணிகளை ஆக்கிரமிப்பதற்கு இடமளிக்க முடியாது. தேசிய கொள்கைகளை தொல்பொருள் திணைக்களம் பின்பற்ற வேண்டும்'' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறிமுறைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் வடக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

அத்தோடு, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்ளாமல் செயற்படுவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ''நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கிறீர்களா? அல்லது நான் உங்களுக்கு வரலாறு கற்பிக்க வேண்டுமென விரும்புகிறீர்களா?'' என்று அதிகாரிடம் கடுந்தொனியில் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் 229 ஏக்கர் காணியை விடுப்பதற்கான கடிதத்தை ஜூன் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உறுதியளித்திருந்தார். எனினும், இதுவரையில் அதற்கான பதில் வழங்கப்படவில்லை என வடக்கு மாகாண பிரதிநிதிகளால் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது. இதற்கு பதிலளித்த பணிப்பாளர் நாயகம், அதனை விடுவிப்பதில் பாரிய சிக்கல் காணப்படுவதாகக் குறிப்பிட்டார்.

எனினும், அது அமைச்சரவையின் கொள்கை என்றும், அதனை தொல்பொருள் திணைக்களம் பின்பற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி கடுந்தொனியில் தெரிவித்ததோடு, அடுத்த முறை இவ்வாறு தேசிய கொள்கையைப் பின்பற்றாமைக்கு காரணங்களை முன்வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி எச்சரித்தார்.

*''விகாரையொன்றை அமைப்பதற்கு 275 ஏக்கர் நிலப்பரப்பை எடுத்தால் அது மகா விகாரையை விடவும் பெரியதாகிவிடும். மகா விகாரை, ஜேதவனாராமய மற்றும் அபயகிரி உள்ளிட்ட அனைத்து விகாரைகளையும் இணைத்தால் 100 ஏக்கர் காணப்படும். அவ்வாறெனில் இவற்றை விட பாரிய விகாரையை அமைப்பதற்காகவா நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கிறீர்களா? அல்லது நான் உங்களுக்கு வரலாறு கற்பிக்க வேண்டுமென விரும்புகிறீர்களா? வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக ஒரு விகாரைக்கு 220 ஏக்கர் நிலப்பரப்பு உரித்துடையதாகக் காணப்படும் என்று நான் நினைக்கவில்லை. விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி இது தொடர்பில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும்'' என்றும் ஜனாதிபதி இங்கு தெரிவித்திருக்கிறார்.*

*''திரியாயில் எதற்காக 3000 ஏக்கர் காணி தேவைப்படுகிறது? திரியாய் என்பது விகாரையல்ல. முன்னைய காலங்களில் அது துறைமுக மையமாகும். படகின் மூலம் திரியாயிலிருந்து ஹொரவபொத்தானை வரை செல்ல முடியும். பின் ஹொரவபொத்தானையிலிருந்து அநுராதபுரத்துக்கும், அங்கிருந்து மல்வத்து ஓயாவுக்கும், அங்கிருந்து மன்னாருக்கும் செல்ல முடியும். அந்தப் பகுதியில் வரலாற்று சிறப்பு மிக்க இந்து கோவிலொன்றும் காணப்பட்டது. எனவே, அங்கு தேரர்களால் வைக்கப்பட்டுள்ள கற்களை உடனடியாக நீக்க வேண்டும்''* என்றும் ஜனாதிபதி இதன்போது பணிப்புரை விடுத்திருக்கிறார்.

ஜனாதிபதி ரணிலின் இந்த அதிரடிச் செயற்பாட்டினால் அதிருப்தியடைந்த தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுர மனதுங்க தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கேள்வியெழுப்பிய ஜனாதிபதியின் கருத்துக்கே மதிப்பில்லாமல் அவரை அவமதிக்கும் வகையில் இந்த இராஜினாமா இடம்பெற்றுள்ளது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயங்களை தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு கேள்வியெழுப்பியுள்ளமை தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு எரிச்சலைத் தந்திருக்கக் கூடும். ஆனால், ஜனாதிபதி கூறிய விடயத்தில் உள்ள நியாயங்களை, சந்தேகங்களை தீர்த்துவைக்காமல் திடீரென பதவி விலகுவதானது, தனது கடமைகளுக்கப்பால் சில வேலைகளை பணிப்பாளர் செய்திருப்பாரோ என்ற சந்தேகத்தை மக்கள் மனங்களில் ஏற்படுத்துகின்றது. தமிழ் பௌத்தர்கள் இருந்ததை ஜனாதிபதி ரணில் ஏற்றுக்கொள்வதை தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் எனில் வரலாற்றை மறைக்கும் அல்லது மறுக்கும் வேலையைத்தான் பணிப்பாளர் செய்கிறார் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

எப்படியோ தமிழ் பௌத்தர்கள் இருந்ததை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டமைக்கு வரவேற்பைத் தெரிவிக்க வேண்டும். நிச்சயம் இது பேரினவாதிகள் மத்தியில் ரணிலுக்கு பாரிய அதிருப்தியை, எதிர்ப்பை உருவாக்கப்போகிறது. ஜனாதிபதியின் வரலாறு பாடம் சிங்கள மக்களால் நிச்சயம் ஏற்கப்படாது என்றாலும், அதிலுள்ள தார்மீக நியாயங்களை நிராகரித்துவிட முடியாது .

''ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பௌத்த பிக்குமார் போட்டுக் கிழிப்பார்களோ தெரியவில்லை. அவரை அந்த கௌதம புத்தனும், கதிர்காமக் கந்தனும் காப்பாற்றட்டும்'' என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளதையே நாங்களும் கூறிவைக்கவேண்டியிருக்கிறது.

# ஆட்சிமுறையின் சவால்களுக்கு வார்த்தைகளால் அல்ல - செயல்களால் முகங்கொடுக்க வேண்டும்

பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது, குறிப்பான அக்கறைக்குரிய இரு விவகாரங்களை முதன்மைப்படுத்துகிறது. முதலாவது, வடக்கு, கிழக்கின் முன்னாள் போர் வலயங்களில் தொடரும் உயர்மட்ட நிலையிலான கண்காணிப்பு. நாட்டின் அந்தப் பாகங்களுக்கு செல்பவர்கள் இரு மாகாணங்களிலும் சீருடையுடன் மிகவும் பெருமளவில் படையினரின் பிரசன்னத்தை காணத் தவறமாட்டார்கள். சுற்றுலா தலங்களிலும் கூட இதுவே நிலைமை.

அந்தப் படையினர் 1970களின் பிற்பகுதியில் தொடங்கி 2009 மே மாதம் முடிவுக்கு வந்த அமைதியைக் குலைத்த வன்முறை நிலைவரத்தை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். 14 வருடங்கள் கடந்துவிட்டபோதிலும், நாடு அதன் வன்முறை எனும் கடந்த காலத்தின் மரபை வெற்றிகொள்ளத் தவறியமையை உருவகப்படுத்துவதாக பாதுகாப்புப் படைகளுக்காக இன்னமும் பாரிய செலவினம் அமைந்திருக்கிறது. பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியிலும் கூட பாதுகாப்புக்கு பெரும் நிதி ஒதுக்கப்படுகிறது.

2023 பட்ஜெட் மதிப்பீடுகளின் பிரகாரம் அரசாங்க ஊழியர்களின் மொத்த சம்பளங்களில் பாதுகாப்பு துறையினரின் சம்பளம் 48 சதவீதமாக இருக்கிறது என்று 'வெரைட் ரிசேர்ச்' நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பிந்திய தகவல்கள் கூறுகின்றன. சம்பளங்களுக்கான மொத்த செலவினத்தில் 32 சதவீதத்தை இராணுவம் எடுத்துக்கொள்கிறது. 16 சதவீதம் ஏனைய பாதுகாப்பு சேவைகளுக்கு போகிறது.

உலக வங்கியின் தரவுகளின்படி இலங்கையின் ஆயுதப்படைகளின் அளவு 2017 - 2019 காலப்பகுதியில் 317,000 பேராக இருந்தது. 2021 தெற்காசிய கற்கைகளுக்கான நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இலங்கையின் இராணுவம் உலகில் 17ஆவது பெரிய இராணுவமாக - ஐக்கிய இராச்சியத்தினதையும் விட கூடுதலானதாக - இருக்கிறது. இராணுவத்தின் பெரிய படைப்பிரிவுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே தொடர்ந்து நிலைவைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அரசாங்கத்துக்கு எதிரான உணர்வுகளுக்கு வளமான களமாக அந்த மாகாணங்கள் அமைகின்றன.

நில அபகரிப்புக்கு ஆதரவாக இருப்பது மற்றும் இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையை ஊக்குவிப்பது உட்பட தமிழ் மக்களை பெரிதும் பாதிக்கும் பல்வேறு நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுவதாக வடக்கு, கிழக்கில் மக்கள் பரவலாக உணர்கிறார்கள். ஆனால், போதைப்பொருளுக்கு கடுமையாக அடிமையாகும் போக்கும் குற்றச்செயல்கள் அதிகரிப்பும் வடக்கு, கிழக்கிற்கு மாத்திரம் மட்டுப்பட்டவையல்ல. நாட்டின் ஏனைய பாகங்களிலும் அவை நிலவுகின்றன. குறிப்பாக தலைநகர் கொழும்பைக் கூறமுடியும்.

வடக்கு, கிழக்கை போலன்றி, தென்னிலங்கையில் பிரதான சந்தேகத்துக்குரியவர்களாக பெரும் பணம் பண்ணும் பேராசையில் பழிபாவத்துக்கு அஞ்சாத பாதகச்செயல்களில் ஈடுபடக்கூடிய - சகல அதிகாரங்களும் கொண்ட அரசியல்வாதிகளே விளங்குகிறார்கள். தங்களது கருவிகளாக பாதுகாப்பு படையினரை அவர்கள் பயன்படுத்தக்கூடும். இந்த உணர்வுதான் 'அரகலய' போராட்டத்தின்போது மொத்தம் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வீட்டுக்குப் போகவேண்டும் என்ற சுலோகத்தை பிரபல்யப்படுத்தியது.

### நாடளாவிய கண்காணிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட சம்பவம் வடக்கில் நிலவும் கண்காணிப்பு பிரச்சினையை மையமாகக் கொண்டதாகும். பொது மைதானமொன்றில் விளையாட்டு கழகம் ஒன்றைச் சேர்ந்த சுமார் இருபது ஆதரவாளர்களை சந்தித்துக்கொண்டிருந்ததாக அவர் கூறுகிறார். அவர்களுடன் தான் பேசிக்கொண்டிருந்தபோது இனந்தெரியாத இருவர் மோட்டார் சைக்கிளில் வந்தனர். 15 - 20 அடி தூரத்தில் தங்கள் வாகனத்தை நிறுத்திய அவர்களிடம் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்று கேட்டு அடையாள அட்டைகளை காட்டுமாறு கேட்டபோது அதற்கு அவர்கள் மறுத்தார்கள் என்று பொன்னம்பலம் கூறினார்.

சிவில் உடையில் வந்த அவ்விருவரும் புலனாய்வு தகவல்களை திரட்டவந்த பொலிஸ்காரர்கள் என்று பிறகு கூறப்பட்டது. வடக்கு, கிழக்கில் இவ்வாறு நடைபெறுவது வழமையானதாகும். ஆனால், நிகழ்வுகளில் பங்கேற்பவர்களுக்கு அசௌகரியத்தை தரக்கூடியதாக நாட்டின் ஏனைய பாகங்களிலும் இவ்வாறு இடம்பெறுகிறது.

இலங்கை இன்று துரதிர்ஷ்டவசமாக போருக் கான மூலக்காரணிகளைக் கையாளக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காணத்தவறிய நாடாக இருக்கிறது. போருக்குப் பின்னராக நாடாக மாத்திரமல்ல, 'அரகலய'வுக்கு பின்னரான சமுதாயமாகவும் இருக்கிறது. வீழ்ச்சிகண்ட பொருளாதாரம் மக்களுக்கு சொல்லொணா இடர்ப்பாடுகளைக் கொடுத்தது. மக்கள் தங்கள் விருப்பங்களையும் ஆட்சியாளர்களிடம் இருந்து எதிர்பார்ப்பவற்றையும் வெளிப்படுத்துவதற்கு வகைசெய்யக்கூடிய தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் காட்டும் மறுப்பு நிலைவரத்தை மேலும் மோசமடையச் செய்கிறது. இத்தகைய சூழ்நிலையில், வடக்கிலும் கிழக்கிலும் மேற்கொள்ளப்படுவதைப் போன்ற கண்காணிப்பு நடவடிக்கைகள், நாட்டின் ஏனைய பாகங்களிலும் அமைதியின்மை தோன்றக்கூடிய இடங்கள் குறித்து அரசாங்கத்துக்கு முன்கூட்டியே எச்சரிக்கை செய்வதற்காக முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கில் கூடுதலான அளவுக்கு வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் மேற்கொள்ளப்படுவதே வித்தியாசமாகும். தென்னிலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஆதரவாளர்களை சந்தித்துக்கொண்டிருக்கும்போது அங்கு பேசப்படுவதை ஒட்டுக்கேட்பதற்கு பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள் 10 - 15 அடி அண்மையாக மோட்டார் சைக்கிளில் வருவது சாத்தியமில்லை.

இரண்டாவது பிரச்சினை பொன்னம்பலம் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற மரியாதை காட்டப்படாமல் அவர் கைதுசெய்யப்பட்ட முறையில் இருந்து எழுகிறது. இது வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாப்புப் படைகள் ஓர் ஆக்கிரமிப்பு இராணுவம் போன்று நடந்துகொள்கின்றது என்பதை தமிழ் மக்களுக்கு ஊர்ஜிதப்படுத்துகிறது. பொலிஸ் நிலையத்துக்கு வந்து வாக்குமூலத்தைக் கொடுக்குமாறு பொன்னம்பலத்தை பொலிஸார் கேட்டபோதிலும், முன்னதாக மைதானத்தில் வாக்குவாதத்தின்போது தன்னை நோக்கி துப்பாக்கி நீட்டப்பட்ட காரணத்தால் பொலிஸ் நிலையம் சென்றால் தனக்கு பகைமையான சூழல் காணப்படும் என்ற காரணத்தால் அங்கு செல்ல அவர் விரும்பவில்லை.

பொலிஸார் அதற்கு பிறகு கொழும்பில் உள்ள வீட்டில் வைத்து அவரைக் கைதுசெய்து வாக்குமூலம் பெறுவதற்காகவும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காகவும் மீண்டும் வடக்கிற்கு கூட்டிச்சென்றனர்.

அண்மைய கடந்த காலத்தில் வேறு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆத்திரமூட்டக்கூடிய வகையில் நடந்துகொண்ட சந்தப்பங்களிலும் கூட அவர்களை பொலிஸார் கடுமையாக நடத்தாமல் விட்டதை பொன்னம்பலத்தின் கைதுடன் நோக்கும்போது அது ஒரு மனக்கசப்பான ஒப்பீடாக அமைகிறது.

### சமத்துவ குடியுரிமை

புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள கூடுதலான அளவுக்கு கடும்போக்குடைய பிரிவுகளுடன் நெருக்கமான உறவைக்கொண்டிருப்பது உட்பட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கடைப்பிடிக்கும் முனைப்பான தமிழ்த் தேசிய நிலைப்பாடுகள் தெற்கில் இருந்தும் சிங்கள அரசியல் சமுதாயத்திடமிருந்தும் அவரை பெருமளவுக்கு தூரவிலக்கிவிட்டது. அவர் கைதுசெய்யப்பட்டதையும் அதைத் தொடர்ந்த நிகழ்வுகள் குறித்தும் தெற்கின் சிங்கள பெரும்பான்மை இன பகுதிகளைச் சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துகளை வெளியிட்டதாக 'தி இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. ஆனால், கைதுசெய்யப்படுகின்றபோது சிங்கள மொழியில் பொன்னம்பலம் கருத்துகளை வெளியிட்ட பாங்கு இலங்கையில் தமிழ் மக்களுக்கான நீதிக்காக போராடுவதில் அவர் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டின் அறிகுறியாகும். இதை ஊக்கப்படுத்தவேண்டுமே தவிர ஒடுக்கக்கூடாது.

“பொன்னம்பலம் இன்றைக்கே மருதங்கேணிக்கு சென்று வாக்குமூலம் கொடுக்கவேண்டும் அல்லது அவரைக் கைதுசெய்யப்போவதாக பொலிஸார் அச்சுறுத்தியது முற்றிலும் சட்டவிரோதமானதாகும். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அது அவரது சிறப்புரிமையை மீறும் செயலாகும். தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் கலந்துகொள்வதில் இருந்து அவர் தடுக்கப்படுகிறார். இது அடக்குமுறையாகும்'' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் ட்விட்டரில் பதிவுசெய்தார்.

போட்டி தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் வெளிக்காட்டிய ஒருமைப்பாடு நேர்மறையான ஓர் அம்சமாகும். அரசாங்கத்துடனான தங்களின் பேச்சுவார்த்தைகளில் நியாயமான பேரம்பேசும் வல்லமையை பெறவேண்டுமானால் தமிழ்க்கட்சிகள் மத்தியில் ஐக்கியம் ஏற்படவேண்டியது அவசியமாகும். கைதுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வெளிக்காட்டிய எதிர்ப்பு, பொன்னம்பலத்துக்கு சக பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் ஆதரவு மிகவும் குறைவு என்ற தமிழ் ஊடகங்களின் செய்திகளை மறுதலிப்பதாக அமைந்தது.

“பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலத்தின் கோட்பாட்டுடனும் நிலைப்பாடுகளுடனும் எமக்கு வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால், இந்த சபையில் வேறு எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரைப் போன்றும் நடத்தப்படுவதற்கு அவருக்கு உரித்து இருக்கிறது. சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்காக பாராளுமன்றத்துக்கு தயாராகிக்கொண்டிருந்தவேளை அவர் இன்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். அது சட்டவிரோதமானது. சட்டத்தை மதித்துச் செயற்படுமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம். இது ஒரு சட்டவிரோதமான கைது'' என்று அவர் கூறினார். சகல சமூகங்களினதும் பொதுவான வாழ்விடமாக இலங்கையை கட்டியெழுப்புவதற்கு அவசியமான தேசிய ஐக்கியம் மற்றும் சமத்துவ குடியுரிமை உணர்வை எதிர்க்கட்சித் தலைவர் வெளிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் எதிரெதிர் பக்கங்களில் இருந்தாலும், தேசிய விவகாரங்களை கையாளுவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் பிரேமதாசவும் உயர்ந்த பொறுப்புக்களில் இருக்கும் இன்றைய காலகட்டம், கடந்த கால பிரச்சினைகளையும் சமகால பிரச்சினைகளையும் சீர்செய்வதற்கு சிறந்த ஒரு வாய்ப்பாகும். ஜெனீவாவில் அடுத்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் ஆரம்பமாகவிருக்கும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டிய சிரேஷ்ட அரச அதிகாரிகளின் கூட்டத்தில் நல்லிணக்க நடவடிக்கை திட்டம் ஒன்று குறித்து ஆராயப்பட்டது.

அந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சட்டங்களை வரைவதை துரிதப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களை ஜனாதிபதி அறிவுறுத்தினார். சட்டவாக்கத்துக்கான ஐந்து முக்கிய விவகாரங்கள், நிறுவன ரீதியான நடவடிக்கைகள், காணிப் பிரச்சினைகள், கைதிகள் விடுதலை மற்றும் அதிகாரப் பன்முகப்படுத்தல் ஆகியவை தொடர்பிலான முன்முயற்சிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆராயப்பட்டது.

வார்த்தைகளில் பெருமளவு விடயங்கள் கூறப்பட்டுவிட்ட போதிலும், நடைமுறையில் களத்தில் பெரிதாக எதையும் காணமுடியவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலத்தின் கைது தொடர்பிலான பிரச்சினையை கையாளுவதில் அரசாங்கம் கடைப்பிடிக்கக்கூடிய அணுகுமுறை மாற்றத்துக்கான ஒரு சான்றாக அமையும்.



கலாநிதி ஜெகான் பெரேரா

## நக்கல் நமசிவாயம்

ரணிலும் ராஜபக்ஷமாரும் சண்டை பிடிக்கிறாங்கள் எண்டதையே நம்ப முடியாமல் இருக்குது பாருங்கோ..!



## இன்றைய நாளில்...

- 1618 – டச்சின் முதலாவது செய்திப் பத்திரிகை ஆம்ஸ்டர்டாமில் வெளியிடப்பட்டது.
- 1872 – கனடாவில் தொழிற்சங்கங்கள் சட்டபூர்வமாக்கப்பட்டன.
- 1907 – பெண்களுக்கு நோர்வே வாக்குரிமை அளித்தது.
- 1946 – மலாயாவில் இருந்து இரண்டாவது தொகுதி தமிழர்கள் இலங்கை வந்து சேர்ந்தனர்.
- 1949 – இரண்டாம் அல்பேர்ட் என்ற ஒரு செம்முகக் குரங்கு 'வி-2' ஏவுகணை ஒன்றில் 134 கி.மீ. (83 மைல்) உயரத்திற்கு சென்று, விண்வெளிக்கு சென்ற முதலாவது குரங்கு என்ற பெயரைப் பெற்றது. இது விண்வெளியிலேயே உயிரிழந்தது.
- 1962 – ஐரோப்பிய வான் ஆராய்ச்சி மையம் பாரிஸில் அமைக்கப்பட்டது.
- 1967 – 'மரைனர்-5' விண்கலம் வீனஸ் கோளை நோக்கி ஏவப்பட்டது.
- 2002 – புவியருகு விண்பொருள் '2002-எம்.என்.' 75,000 கி.மீ. தூரத்தில் புவியைக் கடந்து சென்றது.
- 2003 – விடுதலைப்புலிகளின் சரக்குக் கப்பல் ஒன்று இலங்கைக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டதில் 11 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டனர்.




## 2023.06.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. பொருளாதார மறுமலர்ச்சிக்காக சுற்றுலாத்துறையை மேம்படுத்தல்**

பொருளாதார மறுமலர்ச்சிக்காக சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக தற்போது காணப்படுகின்ற தடைகள் மற்றும் வாய்ப்புகளை அடையாளங் கண்டு, குறித்த தடைகளை அகற்றி, நிலவுகின்ற வாய்ப்புகளைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய படிமுறைகள் பற்றி அமைச்சரவைக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் தலைமையிலும் மேலும் ஆறு அமைச்சர்களின் பங்கேற்புடனும் அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதற்கு 2022.08.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, குறித்த அமைச்சரவை உபகுழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 25 பரிந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையை சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார். குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

**02. தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**

தேர்தலொன்றின்போது போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் ஒழுக்கநெறிக் கோவை (Code of Conduct) மீறப்படும்போது ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, தேர்தல் தினத்தன்று குறித்த வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாததென விசேடமாக அடையாளங் காணப்பட்ட வாக்காளர்களுக்காக விசேட வாக்கெடுப்பு நிலையத்தை அமைப்பதற்காக 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2022.12.12 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், தேர்தலொன்றிற்கான பெயர்குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்படுகின்ற தினத்திலிருந்து ஊடக வழிகாட்டிகள் (Media Guideline) மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் கட்டளைச்சட்டம், ஜனாதிபதி தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் மற்றும் மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் போன்றவற்றைத் திருத்தம் செய்வதற்காக 2022.12.12 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் திருத்தச் சட்டமூலம் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட திருத்தங்களை உள்ளடக்கி குறித்த தேர்தல் சட்டங்களை தனித்தனியாக திருத்தம் செய்வதற்குப் பதிலாக தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் எனும் பெயரிலான புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துதல் பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த திருத்தங்களை உள்ளடக்கி புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைகள்**

இலங்கை மத்திய வங்கியின் பரிந்துரைகளுக்கமைய ஏதேனும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நடப்புப் பரிமாற்றல்களுக்குரிய வெளிமுகப் பணவனுப்பல்கள் 2020 ஏப்ரல் மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் தற்காலிகமாக நிறுத்துவதற்கும்/மட்டுப்படுத்துவதற்காகவும் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிகள் சட்டத்தின் கீழ் அடிக்கடி கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதுதொடர்பாக இறுதியாக 2022.12.22 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள் 2023.06.30 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளன. இலங்கை மத்திய வங்கியின் நாணயசபையின் பரிந்துரைக்கமைய குறித்த கட்டளைகளை மேலும் 06 மாதகாலத்திற்கு நடைமுறைப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழான ஏற்பாடுகளுக்கமைய அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் குறித்த கட்டளைகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. 1864 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பாண் கட்டளைச் சட்டத்தை இரத்துச் செய்தல்**

பாண் விற்பனையை ஒழுங்குபடுத்தல் மற்றும் விற்பனை செய்யப்படும் பாண்களுக்கு பழுதடைந்த மாவு கலக்கப்படுவதைத் தடுப்பதற்கு இயலுமாகும் வகையிலான ஏற்பாடுகளை உள்ளடக்கி 1864 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பாண் கட்டளைச் சட்டம் விதிக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது குறித்த கட்டளைச் சட்டத்தின் ஒருசில ஏற்பாடுகளுடன் பிரச்சினைகள் எழுகின்ற சந்தர்ப்பங்கள் இருப்பதால் குறித்த கட்டளைச் சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை இல்லையெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கட்டளைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை செயல் தடுப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை செயல் தடுப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2018.03.06 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அங்கீகாரத்தின் பிரகாரம் சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குடும்ப வன்முறை செயல் தடுப்பு (திருத்தச்) சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 2023 ஆம் ஆண்டின 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், ஜனாதிபதி தேர்தல்கள் சட்டம், மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் மற்றும் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

2023 ஆம் ஆண்டின 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் வலுவாக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம், ஜனாதிபதி தேர்தல்கள் சட்டம், மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் மற்றும் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல் கட்டளைச் சட்டத்திற்கான இடைநேர் விளைவான கருமங்களுக்கான திருத்தங்களை மேற்கொள்வதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளதுடன், குறித்த திருத்தங்களை மேற்கொள்வதற்காக 2023.01.23 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 2022 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டம் தொடர்பான இறுதி நிலைப்பாட்டு அறிக்கையைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்**

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழான ஏற்பாடுகளுக்கமைய, நிதி விடயதானத்திற்குப் பொறுப்பான அமைச்சர் வரவு - செலவுத்திட்டம் தொடர்பான இறுதி நிலைப்பாட்டு அறிக்கையை குறித்த நிதியாண்டு முடிவடைவதிலிருந்து ஐந்து மாதங்களுக்கு (05) பிந்தாமல் பொதுமக்களுக்கு வெளியிடுவதற்கும், பின்னர் குறித்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கமைய, 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் பற்றிய இறுதி நிலைப்பாட்டு அறிக்கை, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# வாசிப்புப்பழக்கத்தை மலையக சிறார்கள் மத்தியில் ஊக்குவிக்க விசேட திட்டம்

## மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிவப்பிரகாசம்









(இக்பால் அலி)

மலையக சிறார்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு நடமாடும் புத்தக சேவையின் மூலம் நடவடிக்கை எடுத்துவருகின்றோம் என்று மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

மனித அபிவிருத்தி ஸ்தாபனம் நடத்திய வாசிப்பு தொடர்பான விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கும் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வும் கண்டி மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன. அந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மலையக பிள்ளைகளைப் பொறுத்தவரையில் புத்தகங்களை அல்லது அறிவுசார் நூல்களை வாசித்தல் மிக முக்கியமானதாகும். பாடப் புத்தகங்கள் தவிர்ந்த அறிவுசார் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளுதல், வாசித்தல், பயன்படுத்தல் என்பவை அவர்கள் மத்தியில் மிக அரிதாகவே இருந்து வருகின்றது. பொதுவாக இன்று நூல்கள் மற்றும் பத்திரிகைகளை வாசிப்பதென்பது குறைந்து வருகின்றது. மலையகத்தைப் பொறுத்தவரையில் ஒருசில தோட்டங்களைத் தவிர்ந்த மிக பெரும்பாலான தோட்டங்களில் நூலகங்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன.

நூலக கலாசாரம் என்பது பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் அம்சங்களில் கலக்கப்படாத ஒரு விடயமாகவே இருந்து வருகின்றது. அதேபோல், தோட்டப் பிரதேசங்களில் பாடசாலைகள் தவிர்ந்த, கல்விசார் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துகின்ற மையங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ஏனெனில், பெருந்தோட்டப் பகுதிகள், அங்கு காணப்படுகின்ற பௌதீக அமைப்புகள், கட்டுண்ட தொழிலாளர் அமைப்பு, காலனித்துவ, முகாமைத்துவ அமைப்பு போன்றவை அங்கு நூலக வசதிகளை விருத்தி செய்வதற்கான ஆதாரங்களாகக் காணப்படவில்லை.

இந்தப் பின்னணியில் தான் மனித அபிவிருத்தி ஸ்தாபனம் மலையக பிள்ளைகளின் அறிவியல் விருத்திக்காக வாசிப்புத் திறனை ஊக்கப்படுத்த நடமாடும் நூலக சேவையை ஆரம்பித்துள்ளது. இந்த நடமாடும் நூலக சேவையினூடாக தூரப்பிரதேசங்களில் உள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள், வயோதிபர்கள் போன்றவர்கள் பயனடையும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் மேற்படி நடமாடும் நூலக சேவையினூடாக ஆயிரக்கணக்கான புத்தகங்கள் தோட்ட மாணவர்களுக்கு கிடைத்துள்ளன. அவர்கள் புத்தகங்களைப் பெற்று அவற்றை வாசித்த பின், அவற்றை திரும்பச் செலுத்திவிட்டு மீளவும் புதிய புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறாக சுழற்சி முறையில் இந்தப் புத்தகங்கள் வெவ்வேறு தோட்டங்களையும் சென்றடைகின்றன.

இலங்கையில் பொது நூலகங்கள் பெரும்பாலும் நகரங்கள் அல்லது உப நகரங்களிலேயே காணப்படுகின்றன. அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள பிள்ளைகள் அங்கத்துவத்தினூடாக நூல்களைப் பெற்று வாசித்து பயன்பெற்று வருகின்றனர். ஆனால், பெருந்தோட்டங்களிலுள்ள பெரும்பாலான பிள்ளைகளுக்கு இந்த வாய்ப்பு கிடைப்பதில்லை. அதனால் பெருந் தோட்டங்களிலுள்ள பெரும்பாலான பிள்ளைகள் நூலகங்கள் அல்லது வாசித்தல் என்பனவற்றின் முக்கியத்துவம் பற்றி பெரும்பாலும் தெரியாமலேயே உள்ளனர். எனவேதான் மனித அபிவிருத்தி ஸ்தாபனம் நடமாடும் நூலகம் என்ற கருப்பொருளின் அடிப்படையில் நூலக கலாசாரத்தை மலையகப் பிள்ளைகள் மற்றும் இளைஞர்களிடையே ஏற்பாடு செய்துவருகின்றது. இதனூடாக அறிவுசார் கலாசாரம், தேடல், புதிய விடயங்களைக் கண்டுபிடித்தல் போன்றவற்றையும் ஊக்கப்படுத்தி வருகின்றது.

மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் இலக்கு பிரதேசங்களான கண்டி, நுவரெலியா மற்றும் கேகாலை மாவட்டங்களிலுள்ள பல தோட்டங்களில் நடமாடும் நூலகம் இயங்கிவருகின்றது. குறிப்பாக, மாணவர்கள் இந்த நடமாடும் நூலக சேவையில் பங்குப்பற்றி நூல்களைப் பெற்று பயனடைந்து வருகின்றனர். இந்த நூலக சேவையில் விஞ்ஞான அறிவியல் புத்தகங்கள், கதைப் புத்தகங்கள், கவிதை, கட்டுரை புத்தகங்கள், நவீன தொழில்நுட்ப மற்றும் கணினி சம்பந்தமான புத்தகங்கள், வாழ்க்கை வரலாறு பற்றிய புத்தகங்கள், கல்விசார் பரீட்சைக்கான வினா - விடை பயிற்சிகள், சிறுகதைத் தொகுப்புகள் மற்றும் ஆங்கில, சிங்கள புத்தகங்கள் என்பவற்றை நடமாடும் நூலக சேவையினூடாக வழங்கிவருகின்றோம் - என்றும் தெரிவித்தார்.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தன்னிச்சையாக முடிவெடுப்பது தவறு

## கௌதாரிமுனை காற்றாலை திட்டம் தொடர்பாக அங்கஜன் எம்.பி. கருத்து



கிளிநொச்சி கௌதாரிமுனை காற்றாலை தொடர்பான கூட்டத்தில் முன்வைக்கப்படும் கருத்துகளை உள்ளடக்காமல் தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பது தவறு என்று பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, கௌதாரிமுனை காற்றாலை திட்டம் உருவாக்கப்படுவதனால் பிரதேச மக்களுக்கு ஏற்படக்கூடிய சாதக - பாதகங்களை ஆராய்ந்து இறுதித் தீர்மானம் மேற்கொள்வதற்கான விசேட கூட்டம் நேற்று (13) கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

விசேட கூட்டத்தின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கௌதாரிமுனை காற்றாலை அமைப்பதன் மூலம் மக்களுக்கு முழுமையான நன்மைகள் கிடைக்க வேண்டும். அதற்கமைய முதலீட்டாளர்களுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய உடன்படிக்கைகள் முன்வைக்கப்படாமல் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்குவது சரியாகாது. மாறாக, மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அனுமதி வழங்கினால் அது அவரது தன்னிச்சையான முடிவாக மட்டுமே அமையும். அது கூட்டத்தின் முடிவாகாது என்றார்.

இக்கூட்டத்தில் யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள், துறைசார் அதிகாரிகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.06.12
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5143 | ரூ. 10,000,000.00 | T | 9 6 9 8 5 7 |
| கொவிசெத | 3385 | ரூ. 62,336,533.20 | B | 21 27 49 78 |
| ஜாதிக சம்பத | 1598 | ரூ. 12,381,308.72 | வெற்றி இலக்கினம் | 9 3 2 9 3 3 |
| தன நிதானய | 1173 | ரூ. 94,625,529.20 | N | 13 48 61 62 |
| ராசிசுப பலன் Handahana | 452 | ரூ. 3,328,922.80 | வெற்றி இலக்கினம்: ரிஷபம்; விசேட இலக்கினம்: ரிஷபம் | 17 23 38 56 |
| Mega POWER | 1491 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 329,113,706.00 | D; சுப்பர் இலக்கம் 16 | 02 04 35 44 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# பகிரங்க ஏல விற்பனை

எமது சேவை மையங்களில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும், மீட்கப்படாத தங்க நகைகள் 2023 ஜுன் மாதம் 17 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08

# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக டெல்மோர் தோட்ட மக்கள் போராட்டம்





(ஆ.ரமேஸ்)

உடப்புஸ்ஸலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெல்மோர் மத்திய பிரிவுத் தோட்டத்தில் உள்ள தொழிலாளர்கள் நேற்றுக்காலை (13) சிறுவர் துஷ்பிரயோகத்துக்கெதிராக 7.30 மணிமுதல் 8.30 மணிவரை வீதிக்கு இறங்கி ஒரு மணிநேர எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

டெல்மோர் மத்திய பிரிவுத் தோட்டத்தில் பதினொரு வயது பாடசாலைச் சிறுமி கடந்த (10) ஆம் திகதி சனிக்கிழமை காலை பிரத்தியேக வகுப்புக்குச் செல்ல பஸ்ஸுக்கு காத்திருந்த போது டெல்மோர் தோட்டத்தைச் சேர்ந்த 62 வயது நபர் இச்சிறுமி மீது சில்மிஷம் புரிய முயற்சித்துள்ளார்.

இதையடுத்து சிறுமி தனது தந்தைக்கு இவ்விடயத்தை தெரிவித்துள்ளார். அதன்பின் சம்பவ இடத்திற்கு உடனடியாக வருகை தந்த தந்தை உடப்புஸ்ஸலாவ பொலிஸாருக்கு முறையிட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர். இந்நிலையில், சந்தேக நபரைக் கைது செய்ய முற்பட்டபோது குறித்த நபர் ஓடி ஒளிந்துள்ளார்.

அதன்பின் பொலிஸார் டெல்மோர் தோட்டத்தில் அவரைத் தேடியபோது சந்தேக நபர் ஆட்டுப்பட்டி ஒன்றில் மறைந்திருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபரை விசாரணையின் பின் ஞாயிற்றுக்கிழமை வலப்பனை நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.மோகன்ராஜ் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது விசாரணையை மேற்கொண்ட பதில் நீதவான் சந்தேக நபருக்கு இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளார்.

மேலும் சிறுமியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி அதன் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உடப்புஸ்ஸலாவ பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதனடிப்படையில் குறித்த சிறுமி உடப்புஸ்ஸலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து டெல்மோர் மத்திய பிரிவுத் தோட்ட மக்கள் சிறுமி மீதான இந்த நடவடிக்கையை கண்டித்தும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவும் ஒன்று கூடி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதையடுத்து நிலைமை வழமைக்குத் திரும்பியது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# ஜனாதிபதியுடன் ஜீவன் இந்தியாவுக்கு விஜயம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூலை 21ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளமை உறுதியாகியுள்ளது. ஜனாதிபதியுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமானும் செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் ஜனாதிபதி தலைமையிலான இலங்கைக் குழுவினர் பேச்சு நடத்தவுள்ளனர்.

இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல். பொருளாதார, பாதுகாப்பு மற்றும் கலை, கலாசார உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் இதன்போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

பாரத பிரதமருடனான சந்திப்பின்போது மலையகம் - 200 தொடர்பிலும் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள மலையகம் - 200 நிகழ்வுக்கு இந்திய பிரதிநிதிகளை அழைப்பதற்கான கோரிக்கையும் விடுக்கப்படும் எனத் தெரியவருகின்றது.




அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முதலீட்டாளர்களுக்கான "அபிமானி" விருது விழா மத்திய மாகாண ஆளுநர் லலித் யூகமகே தலைமையில் நேற்றுமுன்தினம் (12) நடைபெற்றது. அக்குறணை அலவத்துகொட ஏ-9 வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற இவ்வைபவத்தை அக்குறணைப் பிரதேச செயலாளர் காரியாலயம் ஒழுங்கு செய்திருந்தது. இதில் 57 முதலீட்டாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (கண்டி செய்தியாளர்)

# மாத்தளை இந்து மகா வித்தியாலய முன்னாள் அதிபர் காலமானார்



மாத்தளை, இந்து மகா வித்தியாலய முன்னாள் அதிபரும், மாத்தளை சாஹிரா கல்லூரி முன்னாள் ஆசிரியரும், உயனநவ மாஸ்டர், இராணுவ லெப்டினன்ட் ஆகிய பதவிகளை வகித்தவருமான குழந்தைவேல் கடந்த ஞாயிறன்று இறைபதமடைந்தார்.

இவர் தனது நூறாவது பிறந்தநாளை அண்மையில் தனது சொந்த ஊரான மட்டக்களப்பில் புதல்வர்கள், உறவினர், பழைய நண்பர்கள், மாணவார்கள் சகிதம் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

மாத்தளையில் கல்வி, விளையாட்டு உட்பட பல வகையிலும் இவரும் ஆசிரியையான இவரது மனைவியும் பல சேவைகளை ஆற்றியுள்ளனர். அன்னாரது பூதவுடல் கொழும்பு, பொரளை ஏ. எவ். மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை மு. ப.10.00 மணிக்கு கனத்தை பொது மயானத்தில் இடம்பெறும்.

# பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(பதுளை செய்தியாளர்)

பதுளை ஹாலி -எல தமிழ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் வித்தியாலய அதிபர் க. சந்திரபோஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தின்போது நடப்பு வருட நிர்வாகத்தெரிவுகளும் இடம்பெறவிருப்பதனால் வித்தியாலய பழைய மாணவர்கள் அனைவரும் பங்கேற்குமாறு அதிபர் க. சந்திரபோஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சாமிமலையில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(மஸ்கெலியா செய்தியாளர்)

மஸ்கெலியா, சாமிமலை பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்தனர். குறிப்பாக, இளைஞர்களை இலக்குவைத்தே இவ்வாறான கசிப்பு விநியோகம் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கசிப்பு உற்பத்தி சாமிமலை - கல்தோனி பகுதியில் இயங்கி வருகிறது. அதனால் இளைஞர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பொலிஸ் மா அதிபர் முதல் இப்பகுதியில் உள்ள அனைத்து பொலிஸ் அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அப்பகுதி மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# கண்ணிவெடி அகற்றுவோரின் ஆற்றல் விருத்திக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு













(வவுனியா நிருபர்)

கண்ணிவெடி அகற்றும் முன்னணி நிறுவனமான MAG (மக்) தனது நிறுவனத்தில் பணியாற்றும் 230 ஊழியர்களுக்கு நிதிசார் அறிவுப் பயிற்சி, பேச்சு சிங்களம் (நிலை 1 மற்றும் நிலை 11), விவசாயம், ஆங்கில மொழி (நிலை 1), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பயிற்சி, தமிழ் எழுத்தறிவு (நிலை 1) போன்ற பல்வேறு பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்திருந்தது.

இந்நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக இலங்கையிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசகர் (அபிவிருத்தி) மற்றும் ஒத்துழைப்புத் தலைவரான திருமதி லிண்டா எஹ்ரிச்ஸ், இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் டிரெவர் லுடோவிக், வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ.சரச்சந்திர மற்றும் திருமதி கிறிஸ்டி மெக்லென்னன்ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பளையில் தடம்புரண்ட கனரக வாகனம்



(கிளிநொச்சி நிருபர்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முல்லையடி பகுதியில் யாழ். நோக்கிச் சென்றுகொண்டிருந்த கனரக வாகனமொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த வாகனம் ஏ-9 வீதி அருகே முல்லையடி பகுதியில் மின் கம்பத்துடன் மோதி வீட்டின் மதில் மேல் விழுந்து விபத்துகுள்ளானது.

இச்சம்பவமானது நேற்று (13)காலை 6.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது எனவும் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மருதமடு அன்னையின் திருவிழா குறித்து விசேட கலந்துரையாடல்

## யுபிலி பெருவிழா கொண்டாட நடவடிக்கை

(வட்டுக்கோட்டை நிருபர்)

மன்னார் மறை மாவட்டத்தின் பிரசித்திபெற்ற மருதமடு அன்னையின் ஜூலை மாத திருவிழாவை முன்னிட்டு நடைபெறவுள்ள முன்னேற்பாடுகள் குறித்து விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (12) காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம், மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்புத் தரப்பினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அன்னையின் ஜூலை திருவிழா குறித்து அரச அதிபர் தலைமையில் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் இது குறித்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி இடம்பெறவுள்ள மடு அன்னையின் ஆடி திருவிழாவிற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், சுகாதாரம், மருத்துவம், குடிநீர், போக்குவரத்து, பாதுகாப்பு, உணவு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்தும் இம்முறை பல ஆயிரக்கணக்கான மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையிலும் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

கடந்த வருடம் எரிபொருள் தட்டுப்பாடு அதனைத் தொடர்ந்து எரிபொருள் விலையேற்றம் காணப்பட்டது. இதனால் மடுவுக்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது. ஆனால், தற்போது எரிபொருள் போதியளவு உள்ளமையாலும், விலை குறைக்கப்பட்டுள்ளமையாலும் சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஆடித் திருவிழாவில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஜூலை மாத திருவிழா ஆரம்பமாகும்.

ஜூலை மாதம் 2ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மறை மாவட்ட ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத்தொடர்ந்து மருதமடு அன்னையின் திருச்சொரூப ஆசியுடன் திருவிழா நிறைவடையும்.

இவ்வருடம் மேலும் ஒரு நிறைவைக் கொண்டாட ஆரம்பித்துவைக்க இருக்கின்றோம். 1924ஆம் ஆண்டு மருதமடு திருப்பதியில் பல ஆயர்கள் சூழ மருதமடு அன்னைக்கு முடிசூட்டு விழா இடம்பெற்றது. குறித்த முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு நிறைவு யுபிலி பெருவிழாவாக எதிர்வரும் வருடம் (2024) ஜூலை மாதம் கொண்டாடவிருக்கின்றோம்.

அதனை முன்னிட்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி திருவிழாவின்போது மன்னார் மறை மாவட்ட ஆயர் யுபிலி நூற்றாண்டு விழாவை பிரகடனம் செய்துவைப்பார்.

அதனைத் தொடர்ந்து மருதமடு அன்னையின் திருச்சொரூபத்தின் பின் விசேட விதமாக யுபிலி ஆண்டை பிரகடனப்படுத்துவதோடு, அதனை வெளிப்படுத்தும் முகமாக வருடம் முழுவதும் பறக்க விடப்படுகின்ற யுபிலி கொடி மருதமடு ஆலய முன் மண்டபத்தில் ஏற்றிவைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டுமுதல் அடுத்த ஆண்டு ஜூலை வரை மறை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன – என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழ். சிறைச்சாலை பாதுகாவலர் அணியின் முன்மாதிரியான செயல்













(வட்டுக்கோட்டை நிருபர்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் 100ஆவது சிறைச்சாலை பாதுகாவலர் அணியின் 8ஆவது ஆண்டு சேவைக்கால பூர்த்தியை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட 30 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் யாழ். சிறைச்சாலையில் வைத்து வழங்கப்பட்டது.

இதற்கான நிதியை யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி பழைய மாணவன் வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர், ஜெயிலர் தர உத்தியோகத்தர்கள், புனர்வாழ்வு உத்தியோகத்தர், 100ஆவது அணி சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (13.06.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 197.7478 | 210.4009 |
| கனேடியன் டொலர் | 219.5659 | 232.7223 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40.5717 | 43.7504 |
| யூரோ | 316.3531 | 334.7591 |
| ஜப்பான் யென் | 2.1104 | 2.2281 |
| சிங்கப்பூர் டொலர் | 218.5258 | 231.6384 |
| ஸ்ரேலிங் பவுன் | 368.7269 | 388.6424 |
| சுவிஸ் பிரான்ங் | 323.1744 | 343.6650 |
| ஐ.அ. டொலர் | 294.9114 | 309.2237 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 796.8746 |
| குவைட் | குவைட் தினார் | 977.3756 |
| ஓமான் | ஓமான் றியால் | 780.3569 |
| கட்டார் | கட்டார் றியால் | 82.4123 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 80.1114 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81.7952 |

# கால்நடைகளுக்கு வைரஸ் தொற்று பரவல் மாட்டிறைச்சி உண்பதை தவிர்த்துக் கொள்க

## மத்திய மாகாண மிருக வைத்திய பணிப்பாளர் ஆலோசனை

(கண்டி நிருபர்)

கால்நடைகளுக்கு பரவிவரும் வைரஸ் நோய் கட்டுப்பாட்டுக்குள் வரும்வரை மத்திய மாகாணத்துக்குள் கால்நடைகளைக் கொண்டு வருவதற்கும் வெளியே கொண்டு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி திருமதி ஆர்.எம். கே.பி.ராஜநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கால்நடைகளுக்கு பரவிவரும் வைரஸ் நோய் கட்டுப்பாட்டுக்குள் வரும்வரை மாட்டிறைச்சி உண்பதை தவிர்த்துக்கொள்ளுமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மத்திய மாகாண விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி (திருமதி) ஆர்.எம். கே.பி.ராஜநாயக்க இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

வடமேல் மாகாணத்தில் கால் நடைகளுக்குப் பரவிய தோல் அலற்சி நோய் தற்போது மத்திய மாகாணத்திலும் சில பிரதேசங்களில் பரவி வருகிறது.

அதனைத் தடுப்பதற்கு மத்திய மாகாண விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை மற்றும் கலேவலை மிருக வைத்திய அதிகாரி பிரிவிலும் நுவரெலியா மாவட்டத்தில் ராகல மிருக வைத்திய அதிகாரி பிரிவிலும் கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ, பூஜாப்பிட்டிய, ஹத்தரலியத்த மற்றும் உடுநுவர பிரதேச மிருக வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இந்நோய் பரவியுள்ளது.

இந்நிலையில், மேற்கூறப்பட்ட பிரிவுகளில் தம்புள்ளை மிருக வைத்திய அதிகாரி பிரிவில் அதிகளவு தாக்கம் காணப்பட்ட போதிலும் ஏனைய பகுதிகளில் இதன் தாக்கம் குறைந்து காணப்படுகிறது.

இருப்பினும், இது ஒரு வைரஸ் தொற்றாக இருப்பதால் அதனைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதன் முதற்கட்டமாக நோய் காணப்படும் பிரிவுகளில் உள்ள கால்நடைகளை ஏனைய இடங்களுக்குக் கொண்டு செல்வதற்குத் தடை விதித்துள்ளோம்.

இந்நோய் காணப்படும் கால்நடைகளின் மேல் புறத் தோலில் தடிப்பான தழும்புகள் அல்லது அலற்சி காணப்படும். இதுபோன்ற அறிகுறிகள் கால்நடைகளுக்கு காணப்பட்டால் உடன் தமது பிரதேச மிருக வைத்திய அதிகாரியை நாடுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

# சீனன்கோட்டையில் ஷாதுலிய்யா மனாக்கிப் தமாம் மஜ்லிஸ்



(பேருவளை நிருபர்)

பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் 132 ஆவது வருட ஷாதுலிய்யா மனாக்கிப் தமாம் மஜ்லிஸும் புதிய கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்டுள்ள காலி அலிய்யா அரபுக் கல்லூரியின் பணிப்பாளரும் காலி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவருமான மௌலவி எம்.இஸட். முஹம்மத் ஸுஹுர் (பாரி)யை வரவேற்கும் நிகழ்வும் 10ஆம் திகதி இரவு இடம்பெற்றன.

கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.எம். ஸைனுல் ஆப்தீன் (பஹ்ஜி), மௌலவி எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி) ஆகியோரின் இணைத்தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதிய கலீபதுல் குலபா பொன்னாடை போர்த்தி - நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம். முக்தார், உப தலைவர்களான அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். ரிழ்வான் (நழீமி), முஸ்தாக் ஜாபிர், இணைச் செயலாளர்களான எம்.எம்.எம். சிஹாப், ரம்லான் அரூஸ், பிரதிப் பொருளாளர்களான ஸப்வான் நயீம், ஹில்மி மௌஸுன், ஸவாஹிர் ஸரூக், உறுப்பினர்களான அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி), எம்.இஸட். எம். இஸ்ஸத் ஆகியோரின் பங்குபற்றலுடன் பள்ளிச்சங்கத்தின் சார்பில் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சீனன் கோட்டை ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலியா கலாபீட 6ஆவது தலைப்பாகை சூட்டும் நிகழ்வும் இதன்போது இடம் பெற்றது.

மாணவர்களுக்கு கலீபதுல் குலபா மௌலவி முஹம்மது ஸுஹுர் (பாரி), கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அஸ்ஸெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா (முர்ஸி), கலாபீட முன்னாள் பணிப்பாளர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி ஏ.எச்.எம். அஜ்வாத் (அல்பாஸி) ஆகியோரினால் தலைப்பாகை சூட்டப்பட்டது.

சீனன் கோட்டைப் பகுதியிலிருந்து இம்முறை புனித ஹஜ் கடமையை மேற்கொள்ளவுள்ளவர்களுக்காக விஷேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அஸ்ஸெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா (முர்ஸி) பிரார்த்தனையை நிகழ்த்தினார்.

# வவுனியா தொல்லியல் திணைக்கள துணை ஆணையர் பதவிவிலக வேண்டும்!

## மறவன்புலவு சச்சிதானந்தம் கோரிக்கை

தொல்லியல் திணைக்களத் தலைவர் பதவி விலகியதால் பிரச்சினை ஒருபோதும் தீரப்போவதில்லை. வவுனியா தொல்லியல் திணைக்களத் துணை ஆணையாளரும் பதவி விலக வேண்டும் என மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக நேற்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-இந்து, பௌத்த நல்லிணக்கத்தைக் கெடுத்தவர் வவுனியா தொல்லியல் திணைக்களத் துணை ஆணையாளர் என்பதை சிவசேனையில் உள்ள நாங்கள் கூறுகிறோம்.

வட மாகாணத்தில் தொல்லியல் திணைக்கள அடாவடித்தனங்கள் குறித்து சிவசேனையினர் அவரிடம் சென்று முறையிட்டோம். நல்லிணக்கத்துக்கு இடையூறாக இருக்காதீர்கள் எனக் கோரினோம்.

சட்டங்களுக்கமைய நடப்பேன், யார் சொன்னாலும் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்றார்.

எனவே, ஜனாதிபதி அவரையும் உடனடியாக இடம் மாற்றியோ இடைநிறுத்தியோ விசாரணைகளைத் தொடங்க வேண்டும்.

ஜனாதிபதியின் இந்து, பௌத்த நல்லிணக்க முயற்சிகளைச் சிவசேனை பாராட்டுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# களுத்துறையில் அடைமழை: இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(பேருவளை நிருபர்)

களுத்துறை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடரும் அடைமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக தாழ் நிலப் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன் சில பகுதிகளில் வீட்டுக் கூரைகளும் சேதமடைந்துள்ளன. களுகங்கை, பெந்தொட்ட கங்கை உட்பட குளங்கள், நீரோடைகளின் நீர் மட்டங்களும் உயர்ந்துள்ளன.

அடைமழை காரணமாக தோட்டங்களில் இறப்பர் பால் சேகரிப்பு, சீவல், கடற்றொழில், விவசாய நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதனால் அன்றாட கூலித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணம் நடேஸ்வராக் கல்லூரி மாணவர்களுக்கான பேருந்து சேவை



யாழ்ப்பாணம், கீரிமலை நல்லிணக்கபுரத்தில் இருந்து காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி வரை புதிய பேருந்து சேவையொன்று நேற்று முன்தினம் (12) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதலாம் இரண்டாம் தர மாணவர்களுக்கு இலவசமாகவும் ஏனைய தர மாணவர்களுக்கு சாதாரண கட்டணத்துடனும் குறித்த போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நடேஸ்வராக் கல்லூரி மாணவர்களின் நலன்கருதி, நடேஸ்வரா கல்லூரி ஐரோப்பிய பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் பேருந்து சேவை இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து மயிலிட்டி நோக்கிப் புறப்படும் தனியார் பஸ் சேவையானது, மாவிட்டபுரம் - கீரிமலை வீதியூடாக நல்லிணக்கபுரம் சென்று நடேஸ்வராக் கல்லூரி ஊடாகப் பயணிக்கவுள்ளது.

பாடசாலை நாட்களில் இடம்பெறவுள்ள குறித்த போக்குவரத்து சேவையானது காலையில் 7.10, 7.30 மற்றும் 7.40இற்கும் பிற்பகல் 1.40இற்கும் பாடசாலையில் இருந்து நல்லிணக்கபுரம் வரை இடம்பெறும்.

# தெஹிவளை இமாம் அல் - அஸ்கரி கற்கை நிலையத்தின் 10 வருட பூர்த்தி



(அஷ்ரப் ஏ. சமத்)

தெஹிவளை இமாம் அல் - அஸ்கரி கற்கை நிலையத்தின் 10 வருட பூர்த்தி நிகழ்வு வெள்ளவத்தை மெரைன் டிரைவ் வரவேற்பு மண்டபத்தில் கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அல் - அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான அஷ்ஷெய்க் முஹம்மட் முதல்லான் மார்க்க சொற்பொழிவாற்றினார்.

இந்நிகழ்வில் அதிதிகளாக முன்னாள் ஆளுநர் எம்.ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாஹ், முன்னாள் பிரதியமைச்சர் மயோன் முஸ்தபா, சட்டத்தரணி மர்சூக், தெஹிவளை பிரதேச வர்த்தகர்கள், மற்றும் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# கல்வி - சமய ஆலோசனை சபை உறுப்பினர்களுக்கு நியமனக்கடிதங்கள்



கல்வி - சமய ஆலோசனை சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்வியமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தலைமையில் கல்வியமைச்சில் இடம்பெற்றது. பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தில் ஆன்மீக முன்னேற்றங்களை வலுப்படுத்தும் நோக்கில் 128 உறுப்பினர்களுக்கு இதன்போது நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதத் தலைவர்கள், கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் மற்றும் கல்வியமைச்சின் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கந்தளாய் பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு அதிபரை பெற்றுத்தருமாறு கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்






(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட கந்தளாய் பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு அதிபர் ஒருவரை பெற்றுத்தருமாறு கோரி மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமானது பாடசாலை முன்றலில் செவ்வாய்க்கிழமை(13) இடம்பெற்றது. இதில் இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

கந்தளாய் பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நீண்ட காலமாக அதிபராக க்கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபரான எச்.எம்.நௌஸாத்தை பெற்றுத்தருமாறு கோரியே குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, ''வலயக் கல்விப் பணிப்பாளரே சுயாதீனமாக இயங்கு, கல்வியை சீரழிக்காதே, எமது அதிபரை பெற்றுத் தா'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகளையும் மாணவர்கள் ஏந்தியிருந்தனர். இதன்போது கந்தளாய் வலயக் கல்வி அதிகாரிகளிடம் மகஜர் ஒன்றும் மாணவர்களினால் கையளிக்கப்பட்டது.

# கிழக்கு ஆளுநரை கௌரவித்த சிலோன் மீடியா போரம்



(மாளிகைக்காடு, மீனோடைக்கட்டு செய்தியாளர்கள்)

கிழக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அண்மையில் நியமிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் மாகாண அமைச்சருமான செந்தில் தொண்டமானை சிலோன் மீடியா போரம் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தது.

ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்குமிடையிலான சிநேகபூர்வ சந்திப்பு திங்கட்கிழமை(12) மாலை அம்பாறை ஆளுநர் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள், தேவைகள் அடங்கிய மகஜரும் கையளிக்கப்பட்டதுடன், கிழக்கிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்றின் சிறப்பு பிரதியும் வழங்கப்பட்டது.

இக்கௌரவிப்பு நிகழ்வில் சிலோன் மீடியா போரத்தின் தலைவரும் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளருமான கலாநிதி றியாத் ஏ .மஜீட், சிலோன் மீடியா போரத்தின் பொருளாளரும் கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்பப் பேரவைப் பணிப்பாளருமான யூ.எல்.என்.ஹுதா உமர், சிலோன் மீடியா போரத்தின் பிரதித்தலைவரும் ஆசிரியருமான எஸ்.அஸ்ரப்கான், சிலோன் மீடியா போரத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள உத்தியோகத்தர் பைசால் இஸ்மாயில் உட்பட ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# 86 போத்தல் கசிப்புடன் பெண்ணொருவர் கைது

(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனை நிலையத்தை முற்றுகையிட்ட பொலிஸார் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண்ணொருவரை செவ்வாய்க்கிழமை (13) பகல் கைது செய்துள்ளனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பவதினம் பகல் மாவட்ட புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து ஆரையம்பதி சிகரம் பிரதேசத்திலுள்ள கசிப்பு விற்பனை நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கிருந்து 86 போத்தல் கொண்ட 63 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பை மீட்டதுடன் வியாபாரத்தில் ஈடுபட்ட 49 வயதுடைய பெண்ணொருவரையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை தொடர்பிலான கருத்தரங்கு கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.சஹ்துல் நஜீம், கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினர். (நற்பிட்டிமுனைசெய்தியாளர்)

# வெருகலில் 600 பேருக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கிவைப்பு

(மூதூர் செய்தியாளர்)





திருகோணமலை - வெருகல் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த காணி பயனாளிகளுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை(13) காலை இடம்பெற்றது.

வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதற்கட்டமாக 600 பேருக்கு காணி அனுமதிப் பத்திரங்களும் 140 பேருக்கு காணியளிப்பு பத்திரங்களும் வழங்கப்பட்டன.

வெருகல் பிரதேச செயலகத்துக்கு மொத்தமாக ஆயிரத்து 89 பேருக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. ஏனையோருக்கு பிறிதொரு தினத்தில் உறுதிப்பத்திரங்கள் வழங்கப் படவுள்ளன. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரல, மாவட்ட அரசாங்க அதிபர் பீ.எச்.என்.ஜயவிக்கிரம உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நாட்டில் தற்போதுள்ள ஸ்திரத்தன்மை நிலையானதல்ல

## மக்கள் சந்திப்பின்போது திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான், மாவடிப்பள்ளி செய்தியாளர்)

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார ஸ்திரத்தன்மையானது தற்காலிகமானது. பொருட்களை இறக்குமதி செய்வதில் கட்டுப்பாடுகளை விதித்தல் மற்றும் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை நிறுத்தி வைத்திருப்பதால் தான் இந்த தற்காலிக ஸ்திரத்தன்மை காணப்படுகிறது. எனவே, நாட்டில் தற்போதுள்ள ஸ்திரத்தன்மை நிலையானது என நான் நம்பவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மேலும், மீண்டும் கடன்களைச்செலுத்த தொடங்குவதுடன் இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும் நீக்கினால் இலங்கை ரூபா மீண்டும் வலுவிழக்கும் என்றார்.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்திருந்த அவர், கல்முனைத்தொகுதி அமைப்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.எஸ்.எம்.அப்துர் ரஸ்ஸாக் தலைமையில் ஸாஹிபு வீதியிலுள்ள கட்சியின் கல்முனைத்தொகுதி காரியாலயத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் திங்கட்கிழமை(12) மாலை கலந்து கொண்டு கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆதரவாளர்களுடன் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவட்டத்தின் அமைப்பாளர்கள், முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலருக்கும் உறுப்புரிமை அட்டைகளும் வழங்கப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி., பொதுத் தேர்தலுக்காக ஏற்கனவே வழங்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதை ஊடகங்களின் ஊடாக அறிந்து கொண்டேன். அது ஜனநாயகத்துக்கு எதிரான செயலாகும்.

எதிர்காலத்தில் எந்தவொரு காரணத்துக்காகவும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தால் அதற்கும் எமது




கட்சி தயாராக இருக்கிறது. இது தவிர, ஒலிபரப்பு அதிகாரசபைச் சட்டம் குறித்து தற்போது பேசப்படுகின்றது. ஆனால், அத்தகைய சட்டமூலங்களை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. எனினும், சில விடயங்களில் கட்டுப்பாடுகளை வலுப்படுத்த சுய தணிக்கையை நிறுவலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

# தமிழ்ப் பாட வளவாளராக ஜெஸ்மி மூஸா நியமனம்



(பெரியநீலாவணை செய்தியாளர்)

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் தமிழ்ப் பாட ஆசிரிய வளவாளராக ஜெஸ்மி எம்.மூஸா நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண கல்வித் திணைக்களத்தின் பணிப்புரையின் நிமித்தம் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சைக்கமைய மாகாணக் கல்விப் பணிப்பாளரால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின்(தே.பா) பழைய மாணவரான ஜெஸ்மி எம்.மூஸா, சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் தேசிய பாடசாலை, அல்-அர்சத் மகா வித்தியாலயம்(தே.பா), மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றி தரம் ஒன்றைப் பூர்த்தி செய்த பட்டதாரி ஆசிரியராவார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விசேட துறையின் மேல் பிரிவில் பட்டம் பெற்ற இவர் தமிழ் முதுகலைமாணியைப் பூர்த்தி செய்து அதே பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்ட ஆய்வையும் மேற்கொண்டு வருகின்றார். தமிழ் வினா - விடைப் பேழை, நாகம்மாள் ஒரு பார்வை, திருக்குறள் தெளிவுரை அடங்கலாக பாடத்திட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ள இவர், தமிழ்த்துறை சார்ந்த சர்வதேச மாநாடுகள் பலவற்றில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். இலக்கிய விமர்சகராகவும் ஊடகவியலாளராகவும் அறியப்பட்ட இவர் பன்னூலாசிரியர் எஸ்.எம்.எம்.மூஸா - றாஹிலா தம்பதிகளின் புதல்வராவார்.





நிந்தவூர் அட்டப் பள்ளம் பிரதேசத்தில் திங்கட்கிழமை மாலை வீசிய பலத்த காற்றினால் மரங்கள் மற்றும் மின் கம்பிகள் முறிந்து வீழ்ந்து கிடப்பதைக் காணலாம். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)



வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு திருகோணமலை திருக்கோணேசர் யாத்திரிகர் சபையினால் கதிர்காம பாதயாத்திரை செவ்வாய்க்கிழமை(13) காலை திருகோணமலையிலிருந்து ஆரம்பமானது. இந்தப் பாதயாத்திரையில் சுமார் 60க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (கிண்ணியா செய்தியாளர்)




சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு பல நிகழ்வுகள் விபுலானந்தர் நினைவு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்றன. மட்டக்களப்பு, கல்லடி உப்போடை இராமகிருஷ்ணமிஷன் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலய சுவாமி விவேகானந்தா கலாசார மத்திய நிலையம் ஆகியன இணைந்து முன்னெடுத்திருந்த இந்நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜீ, உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரச்சிதானந்தாஜீ மற்றும் கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மு.செல்வராஜா, மீன்பிடித் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சுதாகரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். இதன்போது யோகா பயிற்றுவிப்பாளர் ஸ்ரீ சிவலிங்கம் ஸ்ரீதரன் மற்றும் இராமகிருஷ்ண மிஷன் மாணவர்களின் பங்குபற்றலில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன. (கல்லடி செய்தியாளர்)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



மத்திய அரசு பறித்த மாகாண அதிகாரங்கள மீளவும் விரைவில் பெற பிரதமர் தினேஷ் சொல்லியிருக்காராம் எண்டு நம்மட யாழ். எம்.பி. விக்கினேஷ்வரன் சொல்லியிருக்காரு எலுவா? அவரு சொன்னா மெய்யா மெய்யா எல்லா அதிகாரங்களும் கிடைச்ச மாதிரி இந்த விக்கியர் கனவு காணுராரு போல. காலத்துக்கு காலம் புதுப்புது கதைகளைக் கூறி ஏமாற்றிப்பழகின இனவாதிகள் இப்ப சம்மந்தர உட்டுட்டு விக்கிய வச்சி நல்லா படம் காட்டுறாங்க எண்டது மட்டும் சத்தியமா தெரியுது.

# நுரைச்சோலை சுனாமி வீட்டுத்திட்ட விவகாரம்:

# மக்களுக்கு பகிர்ந்தளிப்பதில் நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும்

## மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஹரீஸ் எம்.பி. கோரிக்கை



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சவூதி அரேபிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச நுரைச்சோலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்தை தேவையுடைய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதில் உள்ள இழுபறியில் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை ஏற்று தேசிய இன விகிதாசாரப்படி அந்த வீட்டுத் திட்டத்தைக் கையளிக்க வேண்டுமென எழுத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அந்தக் கோரிக்கையை ஏற்க முடியாது என அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸின் நெறிப்படுத்தலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ.டி.வீரசிங்க ஆகியோரின் இணைத்தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச உயரதிகாரிகளின் பங்குபற்றலுடன் அம்பாறை மாவட்ட செயலகத்தில் குழுக்கூட்டம் திங்கட்கிழமை(12) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நுரைச்சோலை பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்தை நாட்டின் தேசிய இன விகிதாசாரப்படி வழங்க முன்வரவேண்டுமென்றும் அதுவே உச்சநீதிமன்றத் தீர்ப்பாக உள்ளதாகவும் அந்தக் கூட்டத்தில் எழுத்து மூல கோரிக்கை முன்வைக்கப்பட்டு அந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக கருத்துகளும் முன்வைக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் அந்தக் கூற்றை மறுதலித்து இந்தத் தீர்மானம் மனச்சாட்சிக்கு முரணானதென்றும் அந்த வீட்டுத்திட்டத்தை நாட்டின் தேசிய இன விகிதாசாரப்படி வழங்க முடியாதென்றும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழும் மக்களின் இன விகிதாசாரப்படியே வழங்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

இந்த வீட்டுத்திட்டங்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சவூதி அரசாங்கம் வழங்கிய உதவி. இந்த வீட்டுத்திட்டத்தை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதில் உள்ள இழுபறியால் சவூதி - இலங்கை நட்புறவுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

இந்த வீட்டுத்திட்ட விடயம் தொடர்பில் சவூதி மன்னர் அதிருப்தியில் உள்ளதாக இலங்கைக்கான சவூதி தூதுவர் எங்களிடம் பலமுறை கூறியுள்ளார். இந்த வீட்டுத்திட்டங்களை மனிதாபிமானமே இல்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்காமல் எங்கேயோ இருக்கும் சம்பந்தமே இல்லாத மக்களுக்கு வீடுகளைக் கையளிக்க முனைவது ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் வாதிட்டார்.

இது உச்சநீதிமன்றத்துடன் தொடர்புபட்ட விடயமாக உள்ளதால் இந்த விடயத்தில் உள்ள நியாயங்களை எடுத்துரைக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டமா அதிபரைச் சந்தித்து பேசவேண்டும். அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு கிழக்கு மாகாண ஆளுநரையும் அவர் இவ்வேளையில் கேட்டுக்கொண்டார்.

இது விடயமாக சட்டமா அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட உயர்மட்டங்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து பேச தான் துரிதகதியில் ஏற்பாடுகளைச் செய்வதாக கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது உறுதியளித்தார்.

அத்துடன், கிழக்கு மாகாணத்தில் 4ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் இருக்கத்தக்கதாக கிழக்குக்கு வெளியே ஆசிரியர்களை நியமிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும் கிழக்கில் ஆசிரிய ஆளணி வெற்றிடம் இருக்கத்தக்கதாக மாகாண கல்வியமைச்சு அனுப்பியுள்ள கிழக்கு மாகாண ஆளணி தொடர்பிலான அறிக்கைகளை சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், தனது கண்டனங்களைப் பதிவு செய்ததுடன் ஆசிரிய வெற்றிட்டங்களை நிரப்பி கிழக்கின் கல்வி மேம்பாட்டை உறுதிப்படுத்த கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை கிழக்கில் நியமனம் செய்யத் தேவையான நடவடிக்கைகளை உரியவர்களிடம் பேசி எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

# தம்பலகாமத்தில் நடமாடும் சேவை

(கிண்ணியா செய்தியாளர்)

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் தம்பலகாமம் பிரதேச செயலகமும் முள்ளிப்பொத்தானை ஆரம்ப சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை சனிக்கிழமை(17) இடம்பெறவுள்ளது.

முள்ளிப்பொத்தானை திஸ்ஸபுர ஹமீதியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் காலை 6.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை குறித்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளதாக தம்பலகாமம் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன் தெரிவித்தார்.

இதன்போது இரத்தப் பரிசோதனை, கண் பரிசோதனை, பற் சிகிச்சை, வெளிநோயாளர் பிரிவு பொது வைத்திய சேவை, ஆற்றுப்படுத்தல், சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவி பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ் வழங்கல், பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு, நோய் உதவிக் கொடுப்பனவு (புற்றுநோய், சிறுநீரக நோய்), மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணம் வழங்கல், முதியோர், தேசிய அடையாள அட்டை இறப்பு - பிறப்பு சான்றிதழ் தொடர்பான பல சேவைகள் அன்றைய தினம் இடம்பெறவுள்ளன. இதில் பொது மக்கள் கலந்து கொண்டு இலவச சேவையைப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# மாற்றுத்திறனாளி ஒருவர் படுகாயங்களுடன் மீட்பு

(மீராவோடை செய்தியாளர்)

மாற்றுத்திறனாளியொருவர் படுகாயங் களுடன் மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு - கொழும்பு, வாகனேரி பிரதான வீதியில் திங்கட்கிழமை(12) இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு படுகாயங்களுடன் மீட்கப்பட்டவர் ஓட்டமாவடி - காவத்தமுனை - ஹிஸ்புல்லாஹ் வீதியைச் சேர்ந்த ஏ.நஸீர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

படுகாயங்களுக்குள்ளான நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மர்மமான முறையில் படுகாயமடைந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உகந்தை வழி காட்டுப்பாதை 27ஆம் திகதிவரை திறப்பு

(வாழைச்சேனை செய்தியாளர்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டு கதிர்காமத்துக்கான உகந்தை வழி காட்டுப்பாதை 25ஆம் திகதியுடன் மூடப்படவிருந்த நிலையில், எதிர்வரும் 27ஆம் திகதி வரை திறந்து வைத்திருப்பதற்கு ஆளுநர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பில் பிரசித்திபெற்ற ஆலயங்களின் தீர்த்தோற்சவத்தில் கலந்துகொள்ளும் அடியவர்களும் பாதயாத்திரையை மேற்கொள்ளும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரத்தின் வேண்டுகோளுக்கிணங்க, அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்ட செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து சில விடயங்கள் சம்பந்தமாகப் பேசியிருந்தோம். அதில் முக்கியமாக கதிர்காம பாதயாத்திரை உகந்தை முருகன் ஆலயத்திலிருந்து காட்டுவழிப்பாதை ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது தொடர்பில் கலந்துரையாடியிருந்தோம்.

இதன்போது அம்பாறை மாவட்ட அரச அதிபர், லாகுகல பிரதேச செயலாளர், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை உத்தியோகத்தர்கள், உகந்தை முருகன் ஆலயத் தலைவர் உள்ளிட்ட இவ்விடயத்துடன் தொடர்புபட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

யாத்திரிகர்களின் நன்மை கருதி, அவர்களுக்குச் சாதகமாக இங்கு ஆளுநரின் தலைமையில் சில முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. உகந்தையில் இருந்து கதிர்காமம் வரையான காட்டுப்பாதை சுமார் 56 மைல்கள் இருக்கும். இதனூடாக யாத்திரிகர்கள் செல்லும் போது பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள். அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு தொடர்ச்சியாக குடிநீர் வழங்கல் செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும், நான்கு மைல்களுக்கு இடையிடையே தற்காலிக மலசல கூடங்கள் அமைக்கப்பட வேண்டும், ஒவ்வொரு இரவுகளிலும் தங்குமிடங்களுக்கு அருகே பெண்கள் உடைமாற்றும் கூடாரங்கள் அமைக்கப்பட வேண்டும் போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.

அந்த முடிவுகள் இந்தப் பாதயாத்திரையுடன் அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலாக மட்டக்களப்பிலே மிகப் பிரபல்யமான களுதாவளை பிள்ளையார் கோவில் உள்ளிட்ட சில கோவில்களின் தீர்த்தோற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பாத யாத்திரிகர்களுக்காக 12ஆம் திகதி திறக்கப்பட்ட காட்டுப் பாதை எதிர்வரும் 25ஆம் திகதியுடன் மூடுவதாக ஏற்கனவே முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தன. இருப்பினும், மேற்குறிப்பிட்ட மட்டக்களப்பின் ஆலயங்களின் தீர்த்தோற்சவத்தின் பின்னர் யாத்திரை செல்ல விரும்பும் அடியார்களுக்கு இவ்விடயம் சாத்தியமற்றதாகக் கருதி திறக்கப்பட்ட காட்டுப்பாதையை மேலும் இரண்டு நாட்கள் நீடித்து எதிர்வரும் 27ஆம் திகதி மூடுமாறு இதன்போது என்னால் பிரேரணையொன்று கொண்டு வரப்பட்டது. அந்த விடயத்தை முறையாகப் பரிசீலித்து அப்பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

எனவே, மேற்குறிப்பிட்ட ஆலயங்களின் தீர்த்தோற்சவத்தில் கலந்துகொள்ளும் அடியவர்கள் கூட கதிர்காமம் பாதயாத்திரையை முன்னெடுக்கும் வகையிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வேளையில் இக்காட்டுவழிப்பாதை திறந்திருக்கும் ஒவ்வொரு நாட்களிலும் தங்களுக்கு சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா செலவாகுவதாக லாகுகல பிரதேச செயலாளர் தெரிவித்திருந்தார். அதில் ஒரு பங்கை நாங்கள் பொறுப்பெடுத்து அப்பாதையை மூடும் நாட்களை இரண்டு நாட்கள் பிற்போட்டுள்ளோம். ஆளுநர் இதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்கி 27ஆம் திகதி வரை காட்டுப் பாதை திறந்திருக்க வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்தார்.

எனவே, பாதயாத்திரை செல்லும் அடியவர்கள் எதிர்வரும் 27ஆம் திகதிவரை காட்டுப்பாதையூடாக யாத்திரையைத் தொடரலாம் - என்றார்.

# போதைப்பொருள் உட்பட கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 7 பேர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் ஹெரோயின் போதைப்பொருள், கஞ்சா மற்றும் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட ஏழு பேரை திங்கட்கிழமை(12) இரவு கைதுசெய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றினையடுத்து சம்பவதினமான இரவு 80 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 450 மில்லிகிராம் கஞ்சாவுடன் வேறொரு நபரையும் கைதுசெய்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து, கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட மூவரை கைதுசெய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து 12 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பை மீட்டதுடன் இவ்வாறு வெவ்வேறு சட்டவிரோத குற்றச் செயல்களில் ஈடுபட்ட ஏழு பேரை கைது செய்துள்ளதுடன் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# டெங்கு பரவும் விதத்தில் செயற்பட்ட 4 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு

## தலா 3,500 ரூபா தண்டப்பணம் விதிப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பகுதியில் வீட்டு வளாகத்தில் டெங்கு பரவும் வகையில் செயற்பட்ட 14 பேருக்கு எதிராக வழக்கு பதி செய்யப்பட்டிருந்த நிலையில் ஒருவருக்கு தலா 3ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கானது திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை(13) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே குறித்த 14 பேருக்கும் தலா 3ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டப்பணம் செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அந்தவகையில், திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோய் பரவும் வீதம் அதிகரித்துள்ள நிலையில், உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இரண்டு மரணங்கள் சம்பவித்துள்ளன. இந்நிலையில், செல்வநாயகபுரம் பகுதியில் வீடு வீடாகச் சென்று டெங்கு தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தபோதிலும், அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமல் டெங்கு பரவும் விதத்தில் செயற்பட்ட குறித்த வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யப்பட்டதாகவும் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சையொளிபவன் தெரிவித்தார்.

மேலும் குறித்த பகுதியில் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தொடர்ந்தும் வீட்டு வளாகங்களை சோதனையிட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அம்பாறை ஊடகவியலாளர்களுக்கான 'நவீன டிஜிட்டல் ஊடகவியல்' செயலமர்வு



(எருவில் செய்தியாளர்)

நவயுகத்தோடு இணைந்த புதிய ஊடக செயற்பாடுகள் கட்டியெழுப்பப்படுவதோடு, ஊடகத்துறை மூலம் புதிய யுகத்தை உருவாக்கவும் நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எம்.ஏ. கமல் நெத்மினி கூறினார்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'நவீன டிஜிட்டல் ஊடகவியல்' எனும் தலைப்பிலான செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான வசந்த சந்திரபால தலைமையில், அம்பாறை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் முழு நாள் அமர்வாக 10ஆம், 11ஆம் திகதிகளில் இச்செயலமர்வு இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் 40 பேர் வரையில் செயலமர்வில் கலந்து கொண்டனர். தலா 20 பேர் வீதம், இரு தினங்கள் வெற்றிகரமாகவும் மிகப் பயனுள்ளதாகவும் இந்தச் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. செயலமர்வில், டிஜிட்டல் ஊடகத்துறை விற்பன்னர்களான ஜயசிறி ஜயசேகர, மெட்லால் வீரசூரிய ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி தொடர்ந்து உரையாற்றுகையில், நாட்டில் சக்தி மிக்க, பலம் பொருந்திய ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறைக்குப் பலம் சேர்க்கும் பிராந்திய ஊடகவியலாளர்கள் மிகவும் முக்கியத்துவமிக்கவர்களாவர். மக்கள் பிரதிநிதிகளையும் நல்லாட்சியையும் உருவாக்கும் சக்தி மிக்க ஊடகவியலாளர்கள் நவீன யுக வளர்ச்சிக்கேற்ப பயிற்றுவிக்கப்பட வேண்டும். அந்த வகையில் இத்தகைய செயலமர்வை ஏற்பாடு செய்த அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தையும் சிரேஷ்ட ஊடகவியலாளர் வசந்த சந்திர பாலவையும் விதந்து பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

சங்கத் தலைவர் வசந்த சந்திரபால உரையாற்றுகையில், 'பிராந்திய ஊடகவியலாளர்களின் கடின உழைப்பால் ஊடகங்கள் முதன்மை பெறுகின்ற போதிலும், உரிய பயன்கிடைப்பதாக இல்லை. பிற்காலத்தில் ஓய்வூதியமோ, சகாய நிதிகளோ ஏன் காப்புறுதி கூட இல்லாத பரிதாப நிலைமையே எமது அர்ப்பணிப்புக்குக் கிடைக்கும் பேறாகவுள்ளது. ஊடக நிறுவனங்கள் இத்தகைய எமது அர்ப்பணிப்பை, உழைப்பை சுரண்டும் நிலையிலேயே உள்ளமை கவலை தரும் விடயமாகும்' - எனக் கூறினார்.

# அனர்த்த முகாமைத்துவ கருத்தரங்கு சாய்ந்தமருதில்



(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (13) இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த கருத்தரங்கில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் அதிதியாகக் கலந்து கொண்டார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஐ.எல்.ஸாஹிர் வளவாளராகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.முவாப்பிகா, திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட் உட்பட கல்முனை சாய்ந்தமருது மற்றும் காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்கள், கிராம நிர்வாக உத்தியோகத்தர்கள், அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கரையோரம் பேணல் உத்தியோகத்தர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், காணி உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கல்முனை, சாய்ந்தமருது மற்றும் காரைதீவு ஆகிய பிரதேசங்களில் அனர்த்தத்தை ஏற்படுத்தக்கூடிய மனித செயற்பாடுகளைத் தடுப்பது தொடர்பாகவும் அனர்த்த நிலைமைகளின்போது மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கைகள் தொடர்பாகவும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

# திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு ஒருதொகை மருந்துப் பொருட்கள் கையளிப்பு




(கிண்ணியா செய்தியாளர்)

வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு ஒரு தொகை மருந்து சார் பொருட்கள் செவ்வாய்க்கிழமை(13) கையளிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் வேண்டுகோளுக்கிணங்க கண் சத்திர சிகிச்சை நோயாளர்களின் நலன் கருதி குறித்த கண் வில்லைகள் (intraocular lens) வழங்கி வைக்கும் நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.ரீ.எம்.பாரிஸினால் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் எல்.டபிள்யூ. ஜயவிக்ரமரத்னவிடம் கையளிக்கப்பட்டன.

இந்த மருந்து சார் பொருட்கள் ஐக்கிய அமெரிக்காவில் உள்ள வைத்தியர் வானி பிரேம்ஜிட் குடும்பத்தார் மற்றும் அவுஸ்திரேலியாவில் உள்ள ஈஸ்வரி ஜெகநாதன் குடும்பத்தினரின் நிதி அனுசரணையில் வன்னி ஹோப் இலங்கை அலுவலகத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கண் சத்திர சிகிச்சைப் பிரிவு வைத்திய நிபுணர் மற்றும் வன்னி ஹோப் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்

# மீண்டும் யுனெஸ்கோவில் இணையும் அமெரிக்கா




அமெரிக்கா 12 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் யுனெஸ்கோவில் இணையவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கலாசார மற்றும் அறிவியல் அமைப்பான யுனெஸ்கோ, கடந்த 2011 ஆம் ஆண்டு பலஸ்தீனை தமது உறுப்பினராகச் சேர்க்க முடிவு செய்தது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவ்வமைப்பிலிருந்து அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் வெளியேறின.

193 நாடுகள் உறுப்பினர்களாகவுள்ள இந்த அமைப்பின் முக்கிய நன்கொடையாளராக அமெரிக்கா இருந்து வந்தது. இந்த அமைப்புக்கான நிதியில் 22 சதவீதத்தை அமெரிக்கா வழங்கி வந்தது. இதனால் அமெரிக்காவுக்கு முன்னுரிமை கிடைத்து வந்தது.

அமெரிக்கா வெளியேறியதைத் தொடர்ந்து அந்த இடத்தை சீனா பிடித்துக்கொண்டுள்ளது. தற்போது யுனெஸ்கோவில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அமெரிக்கா மீண்டும் யுனெஸ்கோவில் இணைய முடிவுசெய்துள்ளது. கடந்த, 12 ஆண்டுகளுக்கான நிலுவை உட்பட, 5,100 கோடி ரூபாவை செலுத்தவும் அமெரிக்கா முன்வந்துள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள யுனெஸ்கோ கூட்டத்தில் அமெரிக்காவை மீண்டும் சேர்ப்பதற்கான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

# மனிதர்கள் பயணிக்கக்கூடிய முதல் மின்சார பறக்கும் தட்டு அறிமுகம்



சீனாவின் ஷென்செனில் மனிதர்கள் பயணம் செய்யக்கூடிய வகையிலான முதல் மின்சார பறக்கும் தட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

டோனட் வடிவிலான பறக்கும் தட்டு நிலத்திலும் நீரிலும் செங்குத்தாகப் புறப்பட்டு தரையிறங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மின்சார பறக்கும் தட்டு மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் சுமார் 200 மீற்றர் உயரம் வரை பறக்கக்கூடியது.

12 புரொப்பலர் பிளேட்டுகள் அமைப்புடன் கூடிய இவ்வாகனம் 15 நிமிடங்கள் வரை செயற்படும். தற்போது சுற்றுலா, விளம்பர நிகழ்ச்சிகளுக்காக பயன்படும் இவ்வாகனம் பயணிகள் பயன்பாட்டுக்கு எப்போது வருமெனத் தெரிவிக்கப்படவில்லை.

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

## 6 பேர் உயிரிழப்பு; 30 பேர் படுகாயம்





உக்ரைனின் கிரிவி ரிஹ் (Kryvyi Rih) நகர் மீது ரஷ்யப் படைகள் நேற்று (13) மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், ரஷ்ய படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட 7 கிராமங்களை தாம் கைப்பற்றியுள்ளதாக உக்ரைன் அறிவித்துள்ளது.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடுத்தது. இப்போர் இன்று 476ஆவது நாளாகவும் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

ரஷ்ய தாக்குதலால் உக்ரைன் தலைநகர் கீவ், இரண்டாவது பெரிய நகரான கார்கீவ் மற்றும் துறைமுக நகரான மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளன. அத்தோடு, இலட்சக் கணக்கானோர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். இந்நிலையில், ரஷ்ய தாக்குதல்களை உக்ரைன் தனது நட்பு நாடுகளின் உதவிகளோடு எதிர்கொண்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்று உக்ரைனின் கிரிவி ரிஹ் நகர் மீது ரஷ்ய படைகள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. இத்தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இராணுவ நிர்வாகத்தின் தலைவர் செர்ஹி லைசாக் தெரிவிக்கையில், கிரிவி ரிஹ் மீது ரஷ்ய படைகள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் மக்களின் உடைமைகள் பெரிதளவில் சேதமடைந்தன. இத்தாக்குதலில் 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும், குடியிருப்பு மீதும் தாக்குதல் நிகழ்த்தியுள்ளது. இதில் அடுக்கு மாடிக் கட்டடம் தாக்கப்பட்டதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கிரிவி ரிஹ் பகுதியில் மீட்பு நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

**7 கிராமங்களை கைப்பற்றிய உக்ரைன்**

இதேவேளை, ரஷ்ய வசமிருந்த உக்ரைனின் சபோரிஜியா, டொனெட்ஸ்க் பகுதிகளிலிருந்த 7 கிராமங்களை உக்ரைன் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மேற்கத்தேய நாடுகள் வழங்கிய ஆயுதங்களைக் கொண்டு எதிர்த்தாக்குதல் நடத்தி 90 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு நிலத்தைக் கைப்பற்றி ரஷ்ய படைகளை விரட்டி அடித்ததாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

ஆனால், உக்ரைன் கைப்பற்றியதாகக் கூறும் பகுதிகளில், உக்ரைனின் தாக்குதலை முறியடித்து விட்டதாக ரஷ்யா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாபா வங்காவின் கணிப்பு பலிக்கப்போகிறதா?



பெலாரஸில் அணு ஆயுதங்களை வைப்பதற்கான கட்டமைப்புகள் ஜூலை மாத தொடக்கத்தில் நிறைவுபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. இந்தப் பணிகள் நிறைவுபெற்றவுடன் ரஷ்ய அணு ஆயுதங்கள் பெலாரஸுக்கு வழங்கப்படும் என புட்டின் தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் இந்த அறிவிப்பு உலக நாடுகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் உக்ரைன் உள்ளிட்ட அதன் ஆதரவு நாடுகள் புட்டினின் இந்த அறிவிப்பால் அதிர்ச்சியடைந்துள்ளன. இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி இந்த அணு ஆயுத அச்சுறுத்தல் பாபா வங்காவின் கணிப்பை நினைவுபடுத்தியுள்ளது.

அதாவது, 2023 ஆம் ஆண்டில் மிகப்பெரிய நாடு ஒன்று மக்கள் மீது அணு ஆயுதப் போரை மேற்கொள்ளுமென்றும் இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்க நேரிடுமென்றும் பாபா வங்கா கணித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பாபா வங்காவின் கணிப்புகள் இரட்டைக் கோபுரத் தாக்குதல், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறுவது, செர்னோபில் பேரழிவு, இளவரசி டயானா மரணம், 2004 சுனாமி பேரலைகள், ராணி இரண்டாம் எலிசபெத்தின் மரணம், உலகையே ஆட்டிப்படைத்த கொரோனா என அனைத்தும் பலித்துள்ளதாகக் கூறப்படுகிறது. பாபா வங்காவின் கணிப்புகள் அனைத்தும் நிறைவேறியதால் அணு ஆயுத விடயத்திலும் அது நடந்துவிடுமோ என்ற அச்சம் உலக நாடுகளிடையே எழுந்துள்ளது.

# மீண்டும் முதலிட அரியணையில் ஜோகோவிச்

## 20 ஆண்டுகளின் பின் டொப்-100க்கு வெளியே நடால்



உலக டென்னிஸ் தரவரிசை பட்டியலை சர்வதேச டென்னிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது. இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் (7,595 புள்ளி) மீண்டும் நம்பர் ஒன் அரியணையைப் பிடித்துள்ளார்.

பிரெஞ்ச் ஓபன் போட்டியில் அரை இறுதியில் கார்லஸ் அல்காரசையும், இறுதிச் சுற்றில் கேஸ்பர் ரூட்டையும் வீழ்த்தி 23 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றி சாதனை படைத்த ஜோகோவிச், மூன்றாவது இடத்திலிருந்து முதலிடத்துக்கு முன்னேறியிருக்கிறார். 36 வயதான ஜோகோவிச் இந்த ஆண்டில் 3ஆவது முறையாக முதலிடத்தை ஆக்கிரமித்துள்ளார்.

கடைசியாக கடந்த மே மாதத்தில் முதலிடத்திலிருந்த ஜோகோவிச் நம்பர் ஒன் வீரராக 388 ஆவது வாரத்தில் அடியெடுத்து வைத்துள்ளார். அரை இறுதியில் தோல்வி கண்ட 20 வயது ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ் (7,175) முதலிடத்திலிருந்து 2 ஆவது இடத்துக்கு இறங்கினார்.

முதல் சுற்றில் தோற்று வெளியேறிய ரஷ்ய வீரர் டேனில் மெட்விடேவ் (6,100) ஒரு இடம் சறுக்கி 3ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். இறுதிப்போட்டியில் தோல்வியைச் சந்தித்த நோர்வே வீரர் கேஸ்பர் ரூட் (4,960) 4ஆவது இடத்தில் தொடருகிறார்.

முன்னாள் நம்பர் ஒன் வீரரும், 22 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவருமான ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக ஜனவரி மாதத்திலிருந்து எந்தவித போட்டியிலும் பங்கேற்கவில்லை. இதனால் அவர் 121 இடம் சரிந்து 136 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். ஒற்றையர் தரவரிசையில் ரபெல் நடால் டொப்-100 இடங்களுக்கு வெளியே தள்ளப்பட்டுள்ளது 2003 ஆம் ஆண்டுக்கு பிறகு இதுவே முதல்முறையாகும்.

# ஆஸி., பாக். உள்ளிட்ட அணிகளுடன் அடுத்த டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் ஆடவுள்ள இலங்கை



இரண்டாவது டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை ஆஸி. அணி கைப்பற்றிய நிலையில் மூன்றாவது முறையாக நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் (2023 - 2025) தொடருக்கான அட்டவணையை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

அதன்படி, உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்காக ஒவ்வொரு அணியும் 6 தொடர்களில் விளையாட வேண்டியுள்ளது. அதில் 3 தொடர்கள் உள்நாட்டிலும் 3 தொடர்களை வெளிநாட்டிலும் விளையாட வேண்டும். இந்தச் சுழற்சிக்கான முதல் தொடராக எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடைபெறவுள்ள ஆஷஷ் தொடர் உள்ளது.

அதிகபட்சமாக அவுஸ்திரேலிய அணி 6 தொடர்களில் 21 போட்டிகளை விளையாட வுள்ளது. அதைத்தொடர்ந்து இந்திய அணி 20 போட்டிகளில் விளையாடவுள்ளது. இலங்கை அணி நியூசிலாந்து, ஆஸி. மற்றும் பாகிஸ்தான் அணிகளுடன் சொந்த மண்ணிலும், இங்கிலாந்து, தென்னாபிரிக்க மற்றும் பங்களாதேஷ் அணியுடன் அந்நிய மண்ணிலும் விளையாடவுள்ளது.

தொடர்களானது 2 போட்டிகள் முதல் 5 போட்டிகள் வரை கொண்டது என வேறுபடலாம். போட்டிகளின் எண்ணிக்கை மாறுபட்டாலும், தொடர்களை கைப்பற்றுவதன் அடிப்படையிலேயே புள்ளிகள் வழங்கப்படும். 6 தொடர்களின் முடிவில் ஒவ்வொரு அணிகளும் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இத்தாலியை வீழ்த்தி பீபா உலக சம்பியனான உருகுவே




ஆஜென்ரீனாவில் நடைபெற்ற 23ஆவது பீபா ஜூனியர் உலகக்கிண்ண உதைபந்து தொடரின் இறுதிப்போட்டியில் இத்தாலியை 1-0 என வீழ்த்தி உருகுவே அணி முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

லா பிளாட்டாவில் நேற்று முன்தினம் நடந்த பைனலில் உருகுவே - இத்தாலி அணிகள் மோதின. முதல் பாதி முடிவு கோல் எதுவுமின்றி சமநிலையில் இருந்தது. இரண்டாவது பாதியின் கடைசி நேரத்தில் எழுச்சி கண்ட உருகுவே அணிக்கு 86 ஆவது நிமிடத்தில் லூசியானோ ரோட்ரிக்ஸ் ஒரு கோல் அடித்து கைகொடுத்தார். இறுதியில் உருகுவே அணி 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று இத்தொடரில் முதன்முறையாக உலக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

உருகுவே இதற்கு முன் இரண்டு முறை (1997, 2013) பைனல் வரை சென்று இரண்டாவது இடம் பிடித்திருந்தது. உலகக்கிண்ண (20 வயது) வரலாற்றில் ஆஜென்ரீனா அணி அதிகபட்சமாக 6 முறை கிண்ணம் வென்றுள்ளது.

இம்முறை அதிகபட்சமாக 7 கோல் அடித்த இத்தாலியின் சிசேர் கசடேய், சிறந்த வீரருக்கான கோல்டன் போல், அதிக கோல் அடித்தவருக்கான கோல்டன் பூட் விருதுகளைத் தட்டிச் சென்றார்.

# உலக சாதனை படைத்த கிப்யெகொன், கிர்மா




பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்ற வண்டா டயமண்ட் லீக் மெய்வல்லுநர் போட்டியில் கென்ய வீராங்கனை ஃபெய்த் கிப்யெகொன் பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் எத்தியோப்பிய வீரர் லமெச்சா கிர்மா, ஆண்களுக்கான 3000 மீற்றர் தடைதாண்டி ஓட்டப் போட்டியிலும் உலக சாதனைகளை முறியடித்தனர். இந்த இரண்டு சாதனைகளும் உலக மெய்வல்லுநர் வரலாற்றில் மிகச் சிறந்த சாதனைகளாகப் பதிவாகியுள்ளன.

ப்ளொரென்ஸில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் உலக சாதனையை நிலைநாட்டிய கிப்யெகொன், 5000 மீற்றர் ஓட்டப் போட்டியை 14 நிமிடங்கள், 5.20 செக்கன்களில் நிறைவு செய்து மற்றொரு உலக சாதனையை நிலைநாட்டினார். இதன் காரணமாக 29 வயதான கிப்யெகொனின் இந்தச் சாதனை வரலாற்று ஏடுகளில் அதிசிறந்த சாதனையாகப் பதியப்படவுள்ளது.

ஆண்களுக்கான 3000 மீற்றர் தடைதாண்டி ஓட்டப் போட்டியில் எத்தியோப்பிய வீரர் லமெச்சா கிர்மா உலக சாதனையை நிலைநாட்டினார். போட்டியை 7 நிமிடங்கள், 52.11 செக்கன்களில் நிறைவு செய்து கிர்மா உலக சாதனையை நிலைநாட்டினார். 19 வருடங்களுக்கு முன்னர் சய்த் சயீட் ஷஹீன் என்பவரால் நிலைநாட்டப்பட்ட உலக சாதனையையே (7:53.63) கிர்மா முறியடித்தார்.

கென்யா சார்பாக 2003 வரை போட்டியிட்ட சய்த் சயீட் ஷஹீன், பின்னர் கட்டார் பிரஜையாக போட்டிகளில் பங்குபற்றிவந்தமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7